விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 22 ஞாயிற்றுக்கிழமை (09.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 294

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள் இடையே மோதல்

# முன்னாள் எம்.பி. உட்பட நால்வர் பலி

## துமிந்த சில்வா எம்.பி. படுகாயம்; முல்லேரியாவில் சம்பவம்



பிரேமச்சந்திர

*(கொழும்பு)* கொழும்பின் புறநகரான முல்லேரியாவில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்ற ஆளும் கட்சி முக்கியஸ்தர்களுக்கிடையிலான மோதலில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர். *(20ஆம் பக்கம் பார்க்க)*



# ஆளும் கட்சிக்கு அமோக வெற்றி

கொழும்பு மாநகரசபை உட்பட நேற்று நடைபெற்ற 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் நள்ளிரவு வரை வெளியான முடிவுகளின்படி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றியை பெற்றுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்-2011 இன் மூன்றாவது கட்டத்தில் நேற்று 23 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடைபெற்து.

இத் தேர்தலில் 50-60 வீதமான வாக்கு பதிவுகள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பல்வேறு அசம்பாவிதங்களுடன் இடம்பெற்ற இத் தேர்தல் நீதியானது அல்ல என பவ்ரல் அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு வரை வெளியான முடிவுகளின் பிரகாரம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமோக வெற்றியைப் பெற்றள்ளது.

எனினும் இச்செய்தி எழுதும் வரை கொழும்பு மாநகரசபைத் தேர்தல் முடிபுகள் வெளியாகவில்லை. இதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐ.தே கட்சி மற்றும் மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியன பலத்த எதிர்பார்ப்புடன் போட்டியிட்டன. நள்ளிரவு வரை வெளியான முடிபுகள் வருமாறு,

பதுளை மாநகர சபை

ஐ.ம.சு.மு. 13 ஆயிரத்து 337 வாக்குகளை பெற்று 10 ஆசனங்களையும் ஐ.தே.க. 6ஆயிரத்து 982 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

காலி மாநகரசபை

ஐ.ம.சு.மு. 23 ஆயிரத்து 539 வாக்குகளைப் பெற்று 11 ஆசனங்களையும் ஐ.தே.க. 16 ஆயிரத்து *(19ஆம் பக்கம் பார்க்க)*

# கொழும்புக்கு புறப்பட முன் மத்தாய் ஜெயலலிதாவுடன் அவசர ஆலோசனை

(சென்னை)

இலங்கைக்கான பயணத்தை மேற்கொள்ளும் இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மத்தாய் சென்னையில் தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதாவை நேற்று மாலை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பான மேலதிக தகவல்கள் ஏதும் அதிகாரபூர்வமாக இன்னமும் வெளியிடப்படவில்லை.

சந்திப்பை முடித்துக் கொண்டு வெளியே வந்த ரஞ்சன் மத்தாயிடம் செய்தியாளர்கள் கேள்விகளை எழுப்ப முனைந்த போதும் அவர் எதுவும் பேசாமலேயே அங்கிருந்து சென்று விட்டார்.

இந்திய வெளிவிவகாரச் செயலராக நியமிக்கப்பட்ட பின்னர் முதல் முறையாக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் ரஞ்சன் மத்தாய் கொழும்பு செல்வதற்கு முன்னர் தமிழ்நாடு முதல்வரை சந்தித்திருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

இலங்கைத் தமிழ் மக்களின் விவகாரம் தொடர்பாகவும் தமிழ்நாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் இலங்கை அரசுடன் பேசப்பட வேண்டிய விடயங்கள் குறித்து ரஞ்சன் மத்தாய் தமிழ்நாடு முதல்வருடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளார் என புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா)

# அமெரிக்காவை ஏமாற்ற முயன்ற பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை

விடுதலைப்புலிகள் பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கான றெட் மேர்க்குரி இரசாயனத்தை அமெரிக்காவில் கொள்வனவு செய்ய முயற்சித்ததாக பாதுகாப்பு அமைச்சு கொடுத்த அறிக்கையை நம்பகமற்றது என்று அமெரிக்கா நிராகரித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2006 யூலை 27-ம் திகதி வெளிவிவகார அமைச்சின் செயலர் பாலிக்ககார, விடுதலைப் புலிகளிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பது பற்றிய, பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை ஒன்றை கொழும்பில் இருந்த அமெரிக்க பதில் தூதுவரிடம் கையளித்தார்.

இந்த அறிக்கை இலங்கை அரசுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதன் அடிப்படையில் இலங்கைக்குத் தொழில்நுட்ப உதவிகளை அமெரிக்கா வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதற்கு பதில் தூதுவராக இருந்த ஜேம்ஸ் என்ட்விசில் அந்த ஆவணத்தை வாஷிங்டனுக்கு அனுப்பி அதன் பதிலை பெற்றுத் தருவதாக கூறியிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, பேரழிவு ஆயுதங்களை தயாரிக்கப் பயன்படும் றெட் மேக்குரி என்ற இரசாயனப் பொருளைக் கொள்வனவு செய்வதற்கு விடுதலைப்புலிகள் முயற்சித்துள்ளதாக *(20ஆம் பக்கம் பார்க்க)*

# கல்முனை மாநகரசபை ஸ்ரீ.மு.கா கைப்பற்றியது

கல்முனை மாநகர சபையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 11 ஆசனங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு 3 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் பெற்றுள்ளன. (பா)

# முகமாலையில் வெடிவிபத்து சிப்பாய் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

முகமாலை இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடி விபத்தில் படைச்சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் வெடி விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இதில் குருநாகலைச் சேர்ந்த திரித்துவர திவங்ககுமார (வயது 25) என்ற படைச்சிப்பாயே படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலை கண் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ் வெடி விபத்துச் சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (பா-6)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு




SINGER
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மனிதர்முன் தெய்வம் மறுபடி தோற்றதே!



### திரு. ஆறு. திருமுருகன்

செந்தமிழுஞ் சைவமுந் சேர்ந்துயரப் பாடுபடும்
நந்தமிழர் துயர்தாங்கும் நல்லவரே ! - உந்தனுக்கு
'கலாநிதி'ப் பட்டமதைக் கௌரவமாய்த் தந்திட்டார்
நிலவிடுக நினது புகழ் நிலைத்து.

நல்ல மனத்தாலே நாடியசற் குணத்தாலே
எல்லவரும் போற்றுமினிய பேச்சாலே - எல்லையிலாத்
தொண்டின் திறத்தாலே தூயஇறை யருளாலே
இன்றுநீ யடைந்ததிவ் வுயர்வு.

கல்விப் பணியாற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்
கழகம் உவந்தளித்த கனதியிது! - பல்வகையில்
வல்லமை யிழந்தோர் வறுமையில் உழன்றோர்
அல்லல் தீர்த்ததன் பரிசுஇது.

நல்லா சிரியர்நீ! நாடுபுகழ் அதிபர்நீ!
உல்லாச வாழ்வையு முதறினீர்! - மெல்லவரும்
தென்றற் காற்றும்நீ! தேடிவரு வோர்க்கெலாம்
மன்றத் தமிழேயுன் மாண்பு.

அழுத கண்ணீரை ஆற்றுவிக்கும் தாயுள்ளம்
உழுத வயல்நிலத்து உயர்பயன்நீ! - பழுதறியாத்
தொண்டிற் சிறந்தமனம் தோல்வியே காணாமல்
என்றென்றும் வாழ்கபல் லாண்டு.

ஆறுமுகம் திருமுருகன் ஆற்றிவரும் மக்கள்பணி
ஊறுகின்ற மணற்கேணி ஊற்றாகும் - வீறுகொண்ட
துர்க்கா தேவிக்குத் துணையான அன்பர்பணி
நிற்காமல் நிலைக்கட்டும் நீண்டு.

கடவுட் பணிக்கென்றே காலமகள் தருவித்த
திடங்கொள் மனங்கொண்ட தியாகமே! - படருலகில்
மனிதர்முன் தெய்வம் மறுபடியும் தோற்றதே
புனிதனுன் சேவையைப் புரிந்து.

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு
நல்லூர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு. K. அனுரதன், திருமதி A. நிரோஜினி
(B.Sc.(Hons.) Special in Computer Science)




திரு. திருமதி அனுரதன் நிரோஜினி
தம்பதியினர் யாழ்ப்பாணம்
பல்கலைக் கழகத்தில்
கணனித் துறையில்
பட்டம் பெற்றதை மனதாரப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: அம்மம்மா, அப்பா, அம்மா, சகோதரிமார், அத்தான், அக்ஷயன் குட்டி, ரகுநாதன் குடும்பம், வேல்முருகன் குடும்பம் (சி-4680)

## சிசுவின் சடலம் மீட்பு

(கோப்பாய்)

கோப்பாயில் ஒரு வயதான ஆண் சிசு ஒன்றின் சடலத்தை கோப்பாய் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

இச் சிசுவின் தாயார் என சந்தே கிக்கப்படும் 19 வயதான பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீட்கப்பட்ட சிசுவின் சடலம் யாழ். போதனா வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளது. (பா)

### சேல்ஸ் கேள்ஸ் தேவை

யாழ் நகரில் இயங்கும் எமது ஜவுளி நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள அல்லது வியாபாரம் பழக விரும்பும் பெண் பிள்ளைகள் தேவை.

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (6355)

## திராட்சைப்பழம் உட்கொண்ட குழந்தை வித்து தொண்டையில் சிக்கி மரணம்

## மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

மன்னார் கட்கிடந்தகுளம் கிராமத்தில் திராட்சைப்பழம் உட்கொண்ட குழந்தை ஒன்று திடீரென்று சுகவீனமடைந்த நிலையில் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம் பெற்றுள்ளது.

மன்னார் நாணாட்டான், கட்கிடந்த குளம் கிராமத்தைச் சேர்ந்த ஜெ.விஜிசா (வயது 3) என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த குழந்தை நேற்றுமுன் தினம் மாலை தனது வீட்டில் திராட்சைப்பழம் உட்கொண்ட போது மூச்சுத் திணறல் ஏற்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து அக்குழந்தை அருகிலுள்ள முருங்கன் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்ட குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எச்.எம்.அசாத் தெரிவித்தார்.

திராட்சைப்பழத்தின் வித்து தொண்டையில் சிக்கியதன் காரணமாகவே குறித்த குழந்தை உயிரிழந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது. (பா)

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

### வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டம் (நேரப்)

வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ்
பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது வீடுகளை கட்டி
முடிப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் – 31.10.2011

1. மேற்படி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட்டும் சிலர் இதுவரை கட்டுமானப் பணிகளை முடிவுறுத்தவில்லை. எனினும் அவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக 31.10.2011 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது.
2. குறித்த திகதிக்குப் பின்னர் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
3. எனவே குறித்த திகதிக்கு முன்னர் கட்டுமானப் பணிகளை முடிவுறுத்தி கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
4. குறித்த திகதிக்குப் பின்னர் தங்களுக்குரிய மிகுதிக் கொடுப்பனவுகள் இரத்துச் செய்யப்படுவதுடன் தங்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் யாவும் 30.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் மீளச் செலுத்தப்படாத பட்சத்தில் தங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. தெய்வேந்திரம்
பதில் திட்டப்பணிப்பாளர்
NEHRP
(சி-4679)

### தவறிவிட்டது

அச்செழு, நீர்வேலி எனும் முகவரியினையுடைய பிரதீபன் சயந்தினி என்பவருடைய (796934026V) எனுமிலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன யாழ்ப்பாணத்திற்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுடன் உடன் தொடர்பு கொள் ளவும்.

(6344) T.P.:- 0774171261

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கிருஸ்ணர் பரமேஸ்வரி

பிறப்பு: 15.08.1938
இறப்பு: 11.09.2011

*09.10.2011 (ஞாயிற்றுக் கிழமை) காலை 9.00 மணியளவில் எமது அன்னையின் அந்தியேட்டி கிரியை கீரிமலை புனித தீர்த்தக் கேணியில் நடைபெறும் அந்நிகழ்விலும் 11.10.2011 (செவ்வாய்க்கிழமை) மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.*

தகவல்: பிள்ளைகள்
குணரட்ணம் (சாய்ராம்) குடும்பம்,
இராஜசேகரம் குடும்பம், ஜெயராஜன் குடும்பம் (பிரான்ஸ்),
செல்வராஜா குடும்பம் (டென்மார்க்), கதிர்காமசேகரம் (சேகர்)
புத்தூர் வடக்கு, புத்தூர். (6352)

### நிலமும் வீடும் விற்பனைக்கு

முல்லைத்தீவு, கரைச்சிக் குடியிருப்பில் உள்ள வீடு வளவு 1/4 ஏக்கர் விற்பனைக்குண்டு. முல்லைத்தீவு ரவுனிலிருந்து கால் மைலுக்குள்ளும் மாங்குளம்– முல்லைத்தீவு பிரதான வீதியில் இருந்து 100 மீற்றருக்குள்ளும் உள்ளது. இந் நிலம் வீட்டுடன் அடிப்படைவசதிகளுடனும் உள்ளது. தொடர்பு கொள்ள வேண் டிய தொலைபேசி இலக்கம்:–

0777217633, 0718265648,
0243242443 (6349)

### திருமண சேவை

20 வருடங்களுக்கு மேலாக நேர்த்தியான முறையில் திருமண சேவையை நடாத்தி வரும் எமது ஸ்தாபனத்தாருடன் தொடர்பு கொண்டு உங்கள் மணமகன், மணமகள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.


Multitop Marriage
Propposals
1-1/1, Frankfurt Place,
Colombo - 4.
T.P.:- 0777422692, 0113159274 (6448)

### வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் (பெற்றோல் செற் அருகாமை) வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 077 9149221
075 6715762 (6440)

## அன்னையருள் பெற்று வாழ்கவே



*ஆன்மிகம், கல்வியால்*
*உயர்ந்தோனுக்கு உயர்வாழ்த்துகள்*
*06.10.2011 கலாநிதி*
*பட்டம் பெற்று*
*ஆன்மிகம், அறம், சமூகம்*
*கல்விப் பணியாற்றும்*
**ஆறு. திருமுருகன்**
*அவர்கள் அன்னையருள்*
*பெற்று வாழ்கவே*

வாழ்த்துபவர்: சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள்
(B.A. Dip. in Ed. M.A பிரதி அதிபர்)
யா/ அம்பன் அ.மி.த. பாடசாலை
நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு (6350)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

### Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

### மீண்டும் யாழில்

11.10.2011 முதல் 17.10.2011 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/- ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ஞூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (C-4677)

## புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக 2010/2011 புதிய கல்வியாண்டிற்கான விஞ்ஞானபீட புதுமுக மாணவர்களின் வர வேற்பு நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இரசாயன வியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வானது பல்கலைக்கழக வளாகத் தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆல யத்தில் நடைபெறுகின்ற காலைப் பிரார்த் தனையுடன் ஆரம்பமாக இருப்பதால் அனை த்துப் புகுமுக மாணவர்களையும் காலை 7.30 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தந்து பிரார்த் தனையில் கலந்து கொள்ளுமாறு விஞ்ஞான பீட மாணவ ஒன்றியம் கேட்டுள்ளது. (4-3)

## சுகாதார வாரத்தை முன்னிட்டு சுகநல மேம்பாட்டு திட்டம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவினருடன் இணைந்து தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு பல்வேறு திணைக்களங்கள், நிறு வனங்கள், பொது அமைப்புக்களின் ஒத்து ழைப்புடன் பல்வேறு சுகநல மேம்பாட்டு திட்டங்கள் யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதில் இன்று பெறப்பட்ட தரவுகள், அறிக் கைகள் சார்பாக குழுநிலை ஆய்வு மேற் கொண்டு எதிர்கால வேலைத்திட்டத்தினை தயார் செய்தல் செயற்பாடும் நாளை திங்கட்கிழமை தேசிய சுகாதார வாரத்தையொட்டிய சுகாதார விழிப்புணர்வு நாடக நிகழ்வு யாழ். நாவலர் கலா ச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-12)

## முத்தமிழ் விழா

British Business School நடத்தும் முத்தமிழ் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் திருமதி யசிந்தா அன்ரன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வர் ணனைக் கலாநிதி மதுரகவி காரை. எம்.பி. அருளாந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் இயல், இசை, நாடகத்துறை சார் ந்த நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (4-2)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் யாழ். பல்கலைக்கழகத்தில் **கௌரவகலாநிதி** பட் டம் வழங்கப்பட்டதையடுத்து ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ் தானத்தால் பாராட்டு விழா நடத்தப் படவுள்ளது.

இந் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னபூரணி மண்ட பத்தில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ் தான உபதலைவர் சி.அருளானந்தசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆசியுரையினை கீரிமலை நகுலேஸ்வர ஆதீன குருக்கள் ராஜராஜ ஸ்ரீ. கு.நகுலேஸ்வரக்குருக்கள், மாவை ஆதீன முதல்வர் மகாராஜ ஸ்ரீ.து.ஷ.இரத்தின சபாபதி குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தெல் லிப்பளை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான பிரத மகுரு சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக்குருக்கள், மருதனார்மடம் சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ் தான ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ் வரக்குருக்கள் ஆகியோர் வழங்குவர்.

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சிவலிங் கராஜா, தெல்லிப்பழை வலி வடக்கு பிரதேச செயலர் சு.முரளிதரன், ஸ்கந்தவரோயக் கல்லூரி முன்னாள் அதிபர் க.சிவாஜி ஆகி

## மீள் நிர்மாண கட்டுமானப் பணிகளை இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்யுங்கள்

### திட்டப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கட்டுமானப்பணிகளைப் பூர்த்தி செய்யாதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பு பூர்த்தி செய்ய வேண்டும் என வடக்கு- கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டப் பணிப் பாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து கட்டம் 1 தொடக்கம் வி. வரை தெரிவு செய்யப்பட்ட 13 ஆயிரத்து 350 பயனாளிகளிலிருந்து ஆயிரத்து 995 பய னாளிகள் அவர்களுக்கு வழங்கப்பட்ட வீட் டினை போதியளவு கால அவகாசம் வழங் கியும் இதுவரை பூர்த்தி செய்யவில்லை.

எனவே, எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன் வீட்டுத்திட்ட பணிகள் அனைவரும் தமது வீட் டினை பூர்த்தியாக்கியிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6)

## சுகாதாரவார நிகழ்வுகள்

வடமாகாண சுகாதார வார நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணி க்கு வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி.எஸ்.ஆர்.யூட் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, சிற ப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளனர். (4-12)

## இராசி பலன்

09.10.2011
(புரட்டாதி 22, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
திரயோதசி பின்னிரவு 4.11 மணிவரை
சதயம் பிற்பகல் 12.53 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
பிரதோஷ விரதம்.

**மேடம்** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், எடுத்தகாரியம் கைகூடும் , வழிபர்ட்டால் மகத்துவம் காணும் நாள்.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் தொடர்வீர்கள், சுப நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறி குறி தோன்றும், நண்பர்களின் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், தடைப்பட்ட காரியங்கள் தானக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், பிரயா ணங்களால் நன்மையுண்டு.

**கடகம்** இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தொழில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நாள், செலவுகள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**சிங்கம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோ ங்கும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், கருத்து வேறு பாடுகள் அகலும், பயணங்களால் குதூகலம் காண வேண்டியநாள்

**கன்னி** ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டியநாள், கொடுக்கல்- வாங்கல் களை ஒழுங்குசெய்ய முன்வருவீர்கள், தொழிலில் இருந்த மனஸ்தாபம் அகலும்.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற ஆலயத்திற்குச் செல்லவேண்டிய நாள், தொழிலில் முன் னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத் துக்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** கந்தன் வழிபாடு பெருமை, சந் தித்த நபர்களினால் சந்தோசம் காணவேண்டிய நாள், உறவினர் வருகையுண்டு, சொத்துக்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு** விருப்பங்கள் நிறைவேற ஆலயத்திற்குச் செல்லவேண்டிய நாள், நீண்டநாளைய பிரச்சினைகள் முடிவுக்கு வரலாம், அயலவர்களுடன் நட்பு நிலை அதிகரிக் கும்.

**மகரம்** கந்தனை வழிபட்டு மகத்துவம் காண வேண்டிய நாள், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்களை வகுப்பீர்கள், இல் லத் தேவைகள் பூர்த்தியாகும், பிரிய மான சிலரின் சந்திப்பு இடம்பெற லாம்.

**கும்பம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்லமுடிவுக்கு வரும், தொழில் நலன்கருதி புதிய கூட்டாளிகளைச் சேர்க்கும் எண்ணம் உருவாகும்.

**மீனம்** ஆனந்தவாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆளாகலாம், மூத்த சகோதரர்களால் உத விகள் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பர், வரு மானம் திருப்தி தரும்.

வளவன்

## வாரம் ஒரு தகவல்

### உங்களிடம் ஒரு யோசனை

"சேர்...ஒரு முக்கிய விடயம் சம்பந்தமாக உங்களிடம் யோசனை கேட்க வேண்டும்".

"கேளுங்க... சொல்கிறேன்"

"உடம்பில் பச்சை குத்திக் கொள்கிறார்களே...அதை அழிப்பதற்கு வழி உண்டா?"

"இதுவரைக்கும் இல்லாமல் தான் இருந்தது. இப்பொழுது அதற்கும் ஒரு வழியைக் கண்டு பிடித்துவிட்டார்கள்.

"யார் கண்டு பிடித்தது?"

பிரிட்டனில் உள்ள NHS ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள்"

"எப்படி"

" லேசர் கதிர் மூலமாக அவர்கள் அந்தச் சிகிச்சையைச் செய்கிறார்கள்.வலி இருக்காது.காயம் இருக்காது.அந்த இடத்தில் தழும்பு கூட இருக்காது.பச்சை குத்திய சுவடே இல்லாமல் போய்விடும்"

"இந்த சிகிச்சை முறை கொஞ்ச காலத்தில் நம் நாட்டிற்கும் வருமல்லவா"

"ஆமாம் வரும்"

"அப்படியானால் பரவாயில்லை. இனிமேல் துணிச்சலாக காரியத்தில் இறங்குவேன்."

"என்ன செய்யப் போறீங்க?"

"ஒரு தலைவரிடம் தொண்டனாக சேரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அவர் பெயரையும் உருவத்தையும் என் கையில் பச்சைகுத்திக் கொண்டால் தான் என்னை சேர்த்துக் கொள்வார்."

"நீங்க முன்யோசனையுள்ள தொண்டர் போலிருக்கு... அது சரி, இப்படியொரு புத்திசாலித்தனமான யோசனையை என் னிடம் வந்து கேட்கவேண்டும் என்று எப்படி உங்களுக்கு தோன்றியது?"

"நீங்கள் ஏற்கனவே 3 தடவை கட்சி மாறியவர் என்ற இரகசியம் எனக்குத் தெரியும்,"

"ஹி"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 70 |
| தக்காளி | 50 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 30 |
| கோவா | 30 | 30 | 40 |
| கரட் | 50 | 80 | 80 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 70 |
| கரணைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 80 | 90 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 50 | 60 | 50 |
| முருங்கைக்காய் | 50 | 300 | 90 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரி தம்புள்ள | 30 | 15 | 30 |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 15 |
| தேசிக்காய் | 230 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்திக்கு 41 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்பு அரசாங்கத்தால் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களுக்கென இதுவரை 41 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பெண் போராளிகள் 21 பேருக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வழங்கியதோடு அந்தப் பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வினையும் அரச சார்பற்ற நிறுவனமான லீட்ஸ் நிறுவனம் நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் வீதி அபிவிருத்தி, மின்சாரம், குடிநீர், கல்வி, சுகாதாரம், வீட்டு வசதிகள் போன்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலை சிறுவர்களின் கல்வியை மேம்படுத்தும் முகமாக லீட்ஸ் நிறுவனம் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கியதோடு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கின்றது.

சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளும் துஷ்பிரயோகங்களும் அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறு முன்பள்ளி ஆசிரியர்களிற்கு பயிற்சி வழங்கப்பட்டது வரவேற்கத்தக்க விடயம்.

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தில் 214 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு பல சிறுவர்கள் கல்வி கற்காது தொழில் நடவடிக்கைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறு சிறுவர்கள் உரிமை பறிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அத்தோடு சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படுவதற்கு சமூக கட்டமைப்புக்கள் தளர்த்தப்பட்டதே முக்கிய காரணம்.

கடந்தகால யுத்த சூழல் இவ்வாறு சமூகங்களுக்கிடையே இருந்த கட்டமைப்பை சீர்குலைய வைத்துவிட்டது.

இதுதவிர, வெளிநாட்டு கலாசாரமும் இதற்கு முக்கிய காரணமாக அமைந்து விட்டது.

சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாததற்கு வறுமை மட்டும் காரணமல்ல பெற்றோர்கள், ஆசிரியர்களின் அக்கறையின்மையும் ஒரு காரணம்.

பாடசாலைக் கல்வியை மாணவர்கள் இடைநிறுத்தும் போது அதற்கான காரணத்தை ஆசிரியர்கள் அறிந்து மாற்ற நடவடிக்கையை மேற்கொண்டு கல்வியை தொடர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்படும்போது அவர்களை சிறுவர் இல்லங்களில் சேர்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் அந்தச் சிறுவர்கள் மேலும் மன அழுத்தத்திற்குள்ளாகின்றனர்.

அதுமட்டுமின்றி யாழ். மாவட்டத்தில் 11 சிறுவர் இல்லங்கள் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி எனக்கு வடமாகாண ஆளுநர் அண்மையில் அறிவித்திருந்தார்.

சிறுவர் இல்லங்களை நடத்துபவர்கள் தமது சுயலாபத்திற்காக போதியளவு வசதிகள் இல்லாமல் நடத்திவருகின்றனர்.

எனவே, அரசசார்பற்ற நிறுவனங்களும் அரச அதிகாரிகள் இவ் விடயத்தைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6)

## பொதுக்கூட்டம்

வடமராட்சி கிழக்கின் வெற்றிலைக் கேணி குணவத்தை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பரிபாலன சபைப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும்14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 12 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

நிர்வாக சபைத் தெரிவு நிகழ்வில் பல அரச உத்தியோகத்தர்களும் இராணுவ உயரதிகாரிகளும் கலந்து சிறப்பிக்கவுள்ள தாக ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர்.

(4-12)

### தபால் திணைக்கள நியமனங்களில்

# தமிழ்மொழி தேர்ச்சி கவனிக்கப்பட வேண்டும்

தபால் திணைக்களத்துக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் அவர்களது தமிழ்மொழி தேர்ச்சி குறித்து விஷேட கவனங்கள் செலுத்தப்படுவதில்லையென ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை அமர்வின் போது இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்திருந்தார்.

முன்னதாக கேள்வியெழுப்பிய ஆளும் கட்சி எம்.பி.யான ஏ.எச்.எம்.அஸ்வர் பெரும்பாலான தபால் அலுவலகங்களில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது தமிழ்மொழியில் தேர்ச்சியடைந்த உத்தியோகத்தர்களுக்கு குறைபாடு நிலவுகின்றதா என்றும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தும் வகையில் அவ்வாறான வெற்றிடங்களை நிரப்புமுகமாக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலும் பதிலளிக்கையில்,

நாட்டிலுள்ள அதிகமான தபால் நிலையங்களில் தமிழ் உத்தியோகத்தர்களுக்கும் தமிழ் மொழி தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது. இருப்பினும் விசேட வெற்றிடம் என்று எந்த தபால் நிலையத்திலும் இல்லை.வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் தமிழ் பேசும் அதிகாரிகளே சேவையாற்ற வேண்டும். அந்த வகையில் 2011 ஆம் ஆண்டில் புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இது இவ்வாறிருக்க அரசு கரும மொழிக் கொள்கையின் பிரகாரம் தபால் உத்தியோகத்தர்களுக்கும் தமிழ் மொழிப் பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தபால் திணைக்களத்துக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் போது திறந்த போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களே இணைத்துக் கொள்ளப்படுவர். இதேவேளை தமிழ்மொழியில் தேர்ச்சி பெற்ற உத்தியோகத்தர்களை தெரிவு செய்வது தொடர்பில் விசேட கவனம் எதுவும் செலுத்தப்படுவதில்லை என்றார்.

(4-2)

# மரண அறிவித்தல்



## குமாரசாமி சுந்தரமூர்த்தி

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் கம்பளையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி சுந்தரமூர்த்தி 07.10.2011 அன்று மாலை 4.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார். அன்னார் கம்பளை A.S குமாரசாமி & Co கண்ணன் ஸ்ரோர்ஸ் நிறுவனங்களின் உரிமையாரும், காலஞ்சென்ற குமாரசாமி– ராசம்மா தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற செந்தில்நாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அருளம்பலம், சிவக்கொழுந்து தம்பதியினரின் அருமை மருமகனும், பாக்கியத்தின் பெறாமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் தேவராணி (பூரணம்), நடேசன், பத்மநாதன், சந்திரமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருணகிரிநாதர் (A.S. குமாரசாமி &Co), தேவகுஞ்சரி, இராசகுமாரி, கமலக்கண்ணன் (கண்ணன் ஸ்ரோர்ஸ்), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுவர்ணதேவி, பரஞ்சோதி (வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சிவயோகன், நகுலேஸ்வரி, சுரேந்திரன் (கிருஷ்ணா ஜுவலரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், செல்வநாயகி, காலஞ்சென்ற Dr. அம்பலவாணர், கனகரட்ணம், செந்தில்நாதன், பாலசுப்பிரமணியம் மற்றும் இராசபூபதி, ராகினி, மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருக்குமரன், லோகேந்திரன், செந்தூரன்,தர்ஷினி, சாலினி, சுதன், தனுஷன், காண்டீபன், தர்ஷிகா, மயூரன் ஆகியோரின் அன்பு பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 09.10.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் 113/6, கண்டி வீதி இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக கம்பளை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகவரி:-
இல. 113/6, கண்டி வீதி, கம்பளை.
தொ.பே. 0812351965, 0812351201

(சி/4673)

தகவல்:-
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வாக்காளராக பதிவு செய்யும் உரிமையை தவறவிடாதீர்கள்

## கபே அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மீண்டும் சொந்த இடங்களில் மீள்குடியேற விரும்புபவர்கள் வாக்காளர்களாக உங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் இயக்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேசசபை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான வாக்காளர்கள் பதிவு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போதே அந்த அமைப்பினால் மேற்படி செய்திக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

இவ்வாண்டு வாக்காளர் இடாப்பை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்து இருந்தாலும் அதற்குப் பின்ப கிராம உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்கு கணிப்பிடும் விண்ணப்பங்கள் மூலம் தகவல்களை வழங்கும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தாலும் மீண்டும் வாக்காளர்களாக பதியும் சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது.

தேர்தல்கள்திணைக்களத்தினால்வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை விளம்பரத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் ஒவ்வொரு பிரதேச சபைகள் ஊடாகவும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இவ் விண்ணபத்தை பூர்த்தி செய்து கிராம உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் விண்ணப்பபடிவத்தை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கவும்.

இல்லாவிட்டால் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தில் இணைப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

மேலும் யுத்தம் காரணமாக இருப்பிடங்களை விட்டு வெளியேறிவர்களாக இருந்தாலும் கூட வாக்காளர் இடாப்பில் பதிவு செய்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பத்துடன் குறித்த பிரதேசமாவட்ட தேர்தல் செயலக உதவித்தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்க வேண்டும்.அதில் சொந்த இடத்திலிருந்து வெளியேறி இருந்த காலம்,சொந்த இடத்தில் இருந்து வெளியேறியதற்கான காரணம், வாக்காளர் கணிப்பீட்டின் போது குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு வரமுடியாமைக்கான காரணம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

அத்தோடு கிராம உத்தியோகத்தர் பிரிவின் பெயர், கிராமம், வீட்டு இலக்கம் என்பவற்றையும் உள்ளடக்க வேண்டும்.

இது தவிர உங்களது உறவினர் அல்லது நண்பர் மூலம் உங்களது பகுதி கிராம உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் மேலதிக தகவல்களுடன் கடிதமொன்றினூடாக தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும் முடியும்.

வெளிநாடுகளில் வசிப்பவராக இருந்தால் இலங்கை கடவுச்சீட்டு இலக்கம், வழங்கப்பட்ட திகதி ஆகியன கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும். இலங்கையில் வசிப்போர் உங்களிடம் உள்ள அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிட்டால் இலகுவாக இருக்கும்.

குறித்த விண்ணப்பப்படிவங்கள் உங்கள் கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும். மூலப்பிரதியில் கிராம உத்தியோகத்தரின் கையொப்பம் பெறப்பட வேண்டும்.

உங்கள் கையெழுத்தினால் நிரப்பப்பட்டு கிராம உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட மூலப் பிரதிகளை மாத்திரமே தேர்தல் திணைக்களம் ஏற்றுக் கொள்ளும். ஸ்கேன் அல்லது போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற கபே அமைப்பின் 0114341524 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்பங்களை www.caffesrilanka.org என்ற எமது கணனி வலையமைப்பில் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த அமைப்பினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-4-6)

## மணற்காடு முதல் போக்கறுப்பு வரையான மக்களுக்கான நடமாடும் சேவைகள்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட (யு.என்.டி.பி)நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்துத் திட்டத்தின் அனுசரணையுடன் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சட்ட ஆவணங்களுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் மூன்று மணி வரை மருதங்கேணி பிரதேசத்தில் உள்ள தாளையடி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நடமாடும் சேவையானது மணற்காடு (ஜே/418) தொடக்கம் போக்கறுப்பு (ஜே/434) வரையான பிரதேசங்களை உள்ளடக்கயதாக நடைபெறவுள்ளது.

இதில் பிறப்பு,இறப்பு,திருமணம், மரணம்,காலந்தாழ்த்திய பிறப்பு மற்றும் தேசிய அடையாளஅட்டை போன்ற சட்ட ஆவணங்கள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் அடையாள அட்டைகளுக்கான புகைப்படம் மற்றும் சட்ட ஆவணங்களுக்கான முத்திரைகள் என்பன இலவசமாக வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குட்பட்ட பிரதேச மக்களை கலந்து கொண்டு சட்ட ஆவணங்கள் தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளுமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (4-3)


உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற

Engineering Qualifications

Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



City & Guilds Progression Path

Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
↑
Professional Engineer (Equivalent to BEng-UK)
↑
Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
↑
NCT/ NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
↑
A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
↑
O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும், கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

TVEC Reg. no.: P01/0414

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது


0214 66 66 99 / 0771 067 394

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

# மாணவர்களின் சுய கற்றலை ஊக்குவிக்கும் பொருளியல் நூல்




க.பொ.த உயர்தர வகுப்பில் கற்கின்ற மாணவர்களது கலைத்திட்டத்தில் இலகு 7 இல் அடங்கும் விடயங்களை உள்ளடக்கியதாக பிரபல பொருளியல் ஆசான் வேலாயுதம் கருணாகரன் அவர்களின் பொது விலை மட்டம் விலைச்சுட்டெண் பணவீக்கம் என்ற நூல் வெளிவந்துள்ளது.

புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியதாகவும் இலகுவாக கற்பதற்கு ஏற்றவகையிலும் வினாவிடைகளுடனும் இந்நூல் எழுதப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நீண்டகாலமாக பொருளியல் ஆசிரியராகப் பணிபுரியும் பே.கருணாகரன் அவர்கள் ஏலவே பல நூல்களை வெளியிட்டுள்ளதுடன் அவற்றின் மூலம் மாணவர்கள், உட்பட கல்விப் புலம் சார்ந்தோர் மற்றும் வர்த்தகர்கள் பலனடைந்துள்ளனர்.

அந்த வகையில் பொது விலை மட்டம் விலைச்சுட்டெண், பண வீக்கம் எனும் நூலும் அமைந்துள்ளது.

கடுகு சிறிதானாலும் காரம் பெரிதென்பார்கள். இந்நூல் சிறிதாக இருந்தாலும் குறிப்பிட்ட தலைப்பின் கீழ் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய அனைத்துவிடயங்களும் இருப்பது ஆசிரியரின் ஆழ்ந்த அறிவையும் அனுபவத்தையும் புலப் படுத்துவதாக உள்ளது.

ஏழை முதல் கோடீஸ்வரன் வரை மிகவும் கரிசனைக்குரிய விடயமாக நாட்டின் விலை மட்டம் காணப்படுகின்றது.

விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் உலகின் எல்லா மக்கள் மீதும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பணவீக்கம், அதாவது நீண்ட காலமாக பொது விலைமட்டம் தொடர்ச்சியாகவும் நிலையானதாகவும் அதிகரித்துச் செல்லுதல் பொது மக்களின் முதலாவது தெரிவாகும் எனலாம்.

உயர்வான விலை மட்ட அதிகரிப்புகளும் பெறுமதியுடைய நாணயத் தாள்களின் வெளியீடும் இடம்பெற்று வரும் இக்கால கட்டத்தில் இந்நூல் வெளியாகி இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

பூகோள விசைகளுடன் மிகவும் தொடர்புபடும் பொது விலை மட்டம், விலைச் சுட்டெண், பண வீக்கம் பற்றிய இந்நூலானது க.பொ.த.உயர்தர புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பரீட்சையை மையமாக வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய பல எண்ணக்கருக்களும் வரை படங்கள் மற்றும் விளக்கங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இறுதியாக பலதீர்வு வினாக்கள், விடைகள், கட்டமைப்பு வினாக்கள், விடைகள் தரப்பட்டிருக்கின்றன.

மாணவர்கள் தம்மைத் தாமே பரீட்சித்துப் பார்ப்பதற்கு இந்நூல் பெரிதும் உறுதுணையாக இருக்கும்.

கடைசியாகத் தான் உசாவிய நூல்களை தந்திருப்பது தேடலில் ஆர்வமுள்ள மாணவர்கள், ஆசிரியர்களுக்கு ஒரு ஊக்கியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## புத்தகம் தொடர்பான அறிமுகம்

சுருக்கமாகச் சொன்னால் பொருளியல் பாடத்தை மாணவர்கள் மத்தியில் இலகுபடுத்திய பெருமை இவ்வாசிரியருக்கே சேரும். இது போன்று மாணவர்களும் மக்களும் பயன்பெறக்கூடிய வகையில் பல்வேறு பொருளியல் சார்ந்த புத்தகங்களை வெளியிட்ட ஆசிரியர் வே. கருணாகரன் அவர்களுக்கு இறைவனின் ஆசி கிடைக்க வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

நூல்:- பொதுவிலைமட்டம்
விலைச்சுட்டெண்
பணவீக்கம்
ஆசிரியர்:- வி.கருணாகரன் (யாழ்.கனகரத்தினம் ம.வி)
விலை:-ரூபா 100/-
பக்கம்:-64
வெளியீடு:-செப்டெம்பர் 2011

## காரைநகர் பிரதேசத்தில் இலவச மருத்துவ முகாம்

டயலொக் மற்றும் யுனிலிங் சங்கங்களின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச மக்களிற்கான இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலத்தில் நடாத்தப்படவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகா மில் கடற்படை வைத்திய அதிகாரிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலை நிபுணர்களும் இணைந்து மருத்துவ பரிசோதனைகளையும் சிகிச்சை களையும் வழங்கவுள்ளனர்.

இம் மருத்தவ முகாமில் இலவச மருத்துவ பரிசோதனை, மருந்து வழங்கல், அங்கவீனர்களிற்கு சில்லு நாற் காலிகள் வழங்கல், அங்கவீனர்களுக்கு கைப்பாதுகாப்பு வழங்கல், முக்குகண்ணாடி வழங்கல், குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய் மார்களுக்கு திரிபோசா வழங்கல், சிறுவர்களுக்கு பரிசு பொருட்கள் வழங்கல் என்பவற்றுடன் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப் படும். எனவே அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (4-3)

## நுகர்வோர் அதிகாரசபையின் திடீர் சோதனை நடவடிக்கை

(கொழும்பு)

நுகர்வோர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதல்கள் மூலம் பத்து மில்லியன் ரூபாவிற்கும் கூடுதலான அபராதத் தொகை பெறப் பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

வர்த்தகர்கள் நுகர்வோர் சுரண்டும் நடவடிக்கையை தடுப்பதற்கு ஆகக் கூடுதலான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் யோன்சன் பெர்னாண்டோ தெரிவிக்கின்றார்.

புதினப்பத்திரிகை விளம்பரங்களில் விலைகளைப் பிரசுரிக்காத வர்த்தகர்கள் மீது கடுமையான சட்டங்கள் அமுல் செய்யப் படும். (4-2)

## வாணி விழா நிகழ்வு

துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபமும் அறநெறிபாடசாலையும் இணைந்து நடாத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வ.தணிகாசலம்தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விகடகவி மு.நாவுக்கரசு, சிறப்புவிருந்தினராக வடமராட்சிவலய இந்து சமய ஆலோசகர் சி.நவரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கலை நிகழ்ச்சிகளும் யாழ். பட்டி மன்ற குழுவினரின் பட்டி மன்றமும் இடம் பெறும். (4-2-35)

## சேவை நயப்பு விழா

## திருமதி சண்முகநாதன் அருள்நங்கை



"தோன்றிற்புகழொடு தோன்றுக
அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று"

என்பதற்கேற்ப தோன்றியவர் தான் மாணாக்கரின் அறியாமை இருள் அகற்றி ஞானக்கண்களைத் திறந்து கொண்டிருக்கும் எமது குருவான திருமதி.அருள் நங்கையவர்கள் வித்தைக்கு விலை பேசும் இவ்வையகத்தில் எத்துணை எதிர்பார்ப்புமின்றி ஏழை எளியவர் கல்வி ஏற்றமுற வழிசமைத்து வருகிறார். இவரால் உருவாக்கப்பட்ட ஏறக்குறைய ஐயாயிரம் பட்டதாரிகள் பல்வேறு உயர்பதவிகளை வகித்து இவருக்கு பெருமை சேர்க்கின்றனர். இவரது மாணவராகிய எமக்கு இவர் விரிவுரையாளராக மட்டுமன்றி அன்புடன் அரவணைக்கும் அன்னையாகவும் திகழ்கிறார்.

இவரது பல சமூக சேவைகள் குடத்தினுள் விளக்குப்போல அமைதியாக ஒளி வீசுகின்ற "ஊழி பெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு ஆழி எனப்படுவார்"

என்பதற்கேற்ப நிலையிற் திரியாது மலையின் மானப் பெரிதாகக் காட்சியளிக்கும் எமது குரு அவர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் இந்நாளில் இக்கல்லூரியில் தற்பொழுது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் ஏறக்குறைய ஆயிரத்து ஐந்நூறு மாணவர்கள் சார்பில் இவரது கல்விப்பணி தொடரவும் நீண்டகாலம் நலமாக வாழவும் இறையருள்வேண்டி நிற்கின்றேன்.



தி.கஜன்
மாணவர் ஒன்றியத்தலைவர்,
பேராதனை பல்கலைக்கழகம், (வெளிவாரி)
புதிய உயர்கல்லூரி,

(6346)

## சேவைநயப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புதிய உயர்கல்லூரி இயக்குநரும் 25 வருட உயர்கல்வித்துறையின் இந்து நாகரிக விரிவுரையாளருமாகிய திருமதி. சண்முகநாதன் அருள்நங்கையின் சேவை நயப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சர்ய சுவாமிகள், யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் வணபிதா ஞா.பிலேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் இராமநாதன் கலைவாணி, யாழ்.பல்கக்லைகழக வணிக பீட முகாமைத்தவகற்கைகள் பேராசிரியர் க.தேவராசா, பேராதனைப்பல்கலைக்கழக பொறியியல் பீட நூலகத்தைச் சேர்ந்த வி.கிருஸ்ணமூர்த்தி, சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரிப்பிரிவு இயக்குநர் அ.குமாரவேலு ஆகியோர் நிகழ்த் தவுள்ளனர்.நூல் வெளியீட்டுரையை கல்வியியல் சிரேஷ்ட விரிவுரையாளரும் சட்டத்துறை தலைவருமாகிய கலாநிதி தம்பையா கலாமணி நிகழ்த்தவுள்ளார். (4-3)


## P.W. அரியரட்ணம் ஞாபகார்த்த சிறுவர் இயல் இசை அரங்கு-2011

P.W. அரியரட்ணம் ஞாபகார்த்தமாக அகில உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணக் கல்லூரி பிரதம பாடசாலையினரால் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான தரம்-1 - தரம்-5 மாணவர் பங்குபற்றும் மாபெரும் சிறுவர் இயல், இசை அரங்கவிழா-2011 அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க 23.11.2011 அன்று நடாத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது என்பதை பெருமகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 21.10.2011 இற்கு முன்பதாக எமது கல்லூரியுடன் தொடர்பு கொண்டு தங்களது பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டுகின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி-4675)

# ருவண்டாவுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்த நடவடிக்கை



(கொழும்பு)

ருவாண்டாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ருவண்டாவுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்ட ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ருவண்டாவுடன் உறவுகளைப் பேண வேண்டுமென்ற யோசனையை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை பல ஆபிரிக்க நாடுகளுடன் உறவுகளைப் பேணி வந்துள்ளதாகவும் ருவண்டாவுடனும் நெருங்கிய உறவுகளைப் பேண எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

54 ஆபிரிக்க நாடுகளில் 32 நாடுகளுடன் இலங்கை தற்போது இராஜதந்திர ரீதியான உறவுகளைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்காவின் புதிய நாடாக உருவாகியுள்ள தென் சூடானுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நியமிப்பது குறித்த யோசனையில் சில திருத்தங்கள்

## பசில் உள்ளிட்ட 16 பேர் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பது குறித்த யோசனையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களினால் இந்தத் திருத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த யோசனைத் திட்டத்தை நாடாளுமன்ற செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான மைத்திரிபால சிறிசேன, வாசுதேவ நாணயக்கார, பசில்ராஜபக்ஷ, சம்பிக்கரணவக்க உள்ளிட்ட 14 பேர் இந்தத் திருத்த யோசனையை சமர்ப்பித்துள்ளனர்.

இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட யோசனையில் அரசியலமைப்பு என்ற பதம் உள்ளடக்கப்படவில்லை எனவும் தற்போதைய திருத்தத்தில் அரசியலமைப்பு என்ற பதம் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை மக்கள் ஒரே தேசத்தின் மக்களாகக் கருதி செயற்படக் கூடிய ஓர் அரசியல் மற்றும் அரசியலமைப்பு நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. (4-2)

# பல்கலை. முதலாம் வருடத்திற்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் இணைப்பு

## பல்கலை.மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

இம்முறை அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே காலத்தில் முதலாம் வருடத்திற்கான மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இதுவரை காலமும் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் வேறுபட்ட காலப்பகுதியில் முதலாம் வருடத்திற்கான புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதாக உயர் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டிலுள்ள 90 வீதமான பல்கலைக்கழகங்களில் இம்மாதம் அல்லது அடுத்த மாதத்திற்குள் முதலாம் வருடத்திற்கான மாணவர்கள்ள இணைத்துக் கொள்ளவுள்ளதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டது. (4-2)

# இலங்கை வரும் சுற்றுலா பயணிகளிடம் பணம் அறவீடு

(கொழும்பு)


இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளிடம் பணம் அறவிடும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை சுற்றுலாத் துறையை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கை வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் 50 டொலர் வீதம் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நடைமுறையானது எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாக நிர்வாக குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்த புதிய நடைமுறையானது இலங்கை சுற்றுலாத்துறையை பாதிக்காது எனவும் அவர் குறிப்பிட்டார். (4-2)



கொடிகாமம் தெற்கு தவசிகுளம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட விஜயதசமி விழாவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை ஆசிரியர் தி.யோ.லிங்கேஸ்வரன், ஆசிரியர் சிவகுமார் ஆகியோர் மாலை அணிவித்து பரிசில் வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.




★ 1003-லெயிஃப் எரிக்சன் கனடாவில் லான்ஸ் ஒக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கி அமெரிக்காவின் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்

★ 1604-சுப்பர்நோவா பால் வெளியில் கண்டுபிடிக்கப்பட்டது.

★ 1771-டச்சு சரக்குக் கப்பல் பின்லாந்துக் கரையில் மூழ்கியது.

★ 1804-டாஸ்மானியா தலைநகர் ஹோபாா்ட் நகரம் அமைக்கப்பட்டது.

★ 1806-பிரஷ்யா, பிரான்ஸ் மீது போர் தொடுத்தது.

★ 1820-கயாக்கில் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1831-கிரேக்கத் தலைவர் இயோனிஸ் கப்பொடிஸ்ட்றியா படுகொலை செய்யப்பட்டார்.

★ 1835-கொழும்பு றோயல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

★ 1854-ரஷ்யாவில் செவஸ்தபோல் மீதான தாக்குதலை பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் துருக்கியப் படைகள் ஆரம்பித்தன.

★ 1888-வோஷிங்டன் நினைவு தினம் அக்காலத்தில் உலகில் உயரமான கட்டடம் வோஷிங்டன் டிசியில் பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது.

★ 1934-யூகோஸ்லாவியாவின் மன்னன் முதலாம் அலெக்சாண்டர் கொல்லப்பட்டான்.

★ 1967-சே.குவேரா பொலிவியாவில் கைது செய்யப்பட்ட அடுத்து நாள் புரட்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1981-பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.

★ 1989-ரஷ்யாவின் வரோனியொஷ் அருகில் ஒரு பறக்கும் தட்டு இறங்கியதாக சோவியத் ஒன்றிய செய்தித் ஸ்தாபனம் அறிவித்தது.

★ 2001-இந்தியாவில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.

★ 2004-ஆப்கானிஸ்தானில் முதற்தடவையாக ஜனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.

★ 2006-வடகொரியா தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியது.

### பிறப்புக்கள்

★ 1897-எம். பக்தவத்சலம், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (இ.1987)

★ 1940-ஜான் லெனன், ஆங்கிலப் பாடகர், இசையமைப்பாளர் (இ.1980)

★ 1945-விஜய குமாரணதுங்க, இலங்கையின் சிங்கள திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ.1988)

★ 1968-அன்புமணி ராமதாஸ், தமிழக அரசியல்வாதி

### இறப்புக்கள்

★ 1943-பீட்டர் சீமன், டச்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1865)

★ 1967-சே குவேரா, ஆர்ஜென்டீனிய கெரில்லாத் தலைவர் (பி.1928)

### சிறப்பு நாட்கள்

★ உகண்டா -சுதந்திர தினம் (1962)

★ உலக அஞ்சல் நாள்

# பொற்கடன் வட்டி குறைப்பு

கொமர்ஷல் வங்கி பொற்கடன் வட்டியை மாதாந்தம் 0.91 வீதம் என்ற அடிப்படையில் குறைத்துள்ளது. எந்தவொரு வர்த்தகத் தேவைக்கோ அல்லது தனிப்பட்ட தேவைக்கோ குறுகிய கால அவகாசத்தில் நிதியைத் திரட்டிக் கொள்ள தங்கத்தின் மீதான கடன் உதவுகிறது.

இதைக்கருத்தில்கொண்டே பொற் கடன் வட்டி குறைக்கப்பட்டுள்ளது.

# ஆண்டுக்கு -ஆண்டு அடிப்படையில் கணிக்கப்பட்ட பணவீக்கம் வீழ்ச்சி

தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07=100) ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2011 ஓகஸ்டின் 7 சதவீதத்தில் இருந்து செப்ரெம்பரில் தொடர்ந்து 2-வது மாதமாக 6.4 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

முன்னரான மாத காலப் பகுதியில் ஏற்பட்ட விலை அபிவிருத்திகளின் விளைவாக சராசரி பணவீக்கம் முன்னைய மாதத்தில் 7.1 சதவீத்தில் இருந்து செப்ரெம்பரில் 7.2 சதவீத்திற்கு மிகச் சிறிதளவாய் உயர்வடைந்தது.

மையப் பணவீக்கம் 7.8 சதவீத்தில் இருந்து 6.9 சதவீத்துக்கு கடுமையாக வீழ்ச்சியடைந்த வேளையில் ஆண்டு சராசரி நியதிகளில் மையப் பணவீக்கம் ஓகஸ்டின் 7.5 சதவீத்தில் இருந்து செப்ரெம்பரில் 7.6 சதவீத்திற்கு சிறிதளவால் அதிகரித்து.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.41 | 111.05 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 168.46 | 172.37 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 145.97 | 149.97 |
| சுவிஸ் பிராங் | 117.97 | 121.79 |
| கனேடிய டொலர் | 104.69 | 107.82 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.95 | 109.47 |
| சிங்கப்பூர் டொலர் | 83.85 | 86.25 |
| ஜப்பான் யென் | 1.41 | 1.46 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.24 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 29.99 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# எல்ஓஎல்சி கடன் பத்திரங்கள் வெளியீடு

LOLC குழுமத்தின் பங்குத்தரகு கம்பனியான LOLC Securities Ltd. தனது கடன் பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

எதிர்கால அபிவிருத்திக்காக முதலீடு செய்யும் பழக்கத்தினை மக்கள் மத்தியில் தூண்டும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள எல் ஓ எல்சியின் கடன் பத்திரங்கள் மக்கள் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாக் கொண்டுள் ளது.

எல்ஓஎல்சி செக்கியூரிட்டி லிமிட்டெட்டின் தவிசாளரும் எல்ஓஎல்சி இன் குழும முகாமைத்துவ இயக்குநரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமாகிய கபில ஜெயவர்த்தன கூறுகையில், முதலீடுசெய்ய அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்கும் அதேவேளை நகர், புறநகர் மற்றும் கிராமப் புற இளைஞர்களுக்கு நிதியிடல் தொடர்பில் சக்தியளிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். மிக இளம் வயதில் உள்ள இளைஞர்களுக்கு அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வாய்ப்புகளை இனங்காணச் செய்வதனூடாக அவர்களே தங்களின் நிதி முகாமையாளர்களாக தம்மை உருவாக்கிக் கொள்வதற்கு கற்றுக்கொள்ளச் செய்வதன் மூலம் பக்குவம் அடைந்தவர்களாக மாற்ற முடியும் என்றார்.

உள்ளார்ந்த முதலீட்டாளர்களை வெற்றிகரமான பங்குச்சந்தை முதலீட்டாளர்களாக மாற்றி இலாபகரமானதொரு சந்தையைக் கைப்பற்றுவதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக தேவையான நிபுணத்துவம் ,உட்கட்டமைப்பு மற்றும் குழு வலையமைப்பு ஆகியவற்றை எல்ஓஎல்சி கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.




# அப்பிள் ஆற்றும் அற்புதம்...



வேதாகமம் பல கோடி மக்களுக்கு அப்பிளை அறிமுகப்படுத்தியது. காலப் போக்கில் ஓர் அற்புதமான பழம் என்று கண்டறிந்து தினமும் ஓர் அப்பளைச் சாப்பிட்டால் வைத்தியரை நாட வேண்டியதில்லை என்ற பொருளில் ஆங்கிலேயர் ஒரு பழமொழியையும் உருவாக்கினர்.An apple a day keeps the doctor away என்பதுதான் அந்தப் பழமொழி.

அப்பிளைச் சாப்பிட்டால் மருத்துவர் வீட்டுப்பக்கம் தலைகாட்டமாட்டார் என்பது ஒரு பக்கம் இருக்க, ஒரு சுனாமி போல அப்பிள் நிறுவனத்தின் மின்னியல் சாதனங்கள் பாவனையாளர்களை வாரியள்ளிக் கொண்டு சென்றிருக்கின்றன.

இந்த அப்பிள் உற்பத்திகள் பற்றி சொல்லி வியப்பதற்கு முன்னதாக இந்த அப்பிள் மரத்தை நட்டவர் பற்றி நோக்குவது இன்று சாலப் பொருத்தமாக இருக்கலாம்.

பனைக்கு விடப்பட்டன. தொடர்ந்து வந்த ஆண்டு பொல்லாததாக அமைந்தது. புதிய இயக்குநருடன் வாக்குவாதப்பட்ட ஸ்ரீவ் அப்பிள் நிறுவனத்தில் இருந்து விலகிக்கொண்டார்.

அவருடன் இணைந்து அவரது பாடசாலை நண்பரும் தன் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டார்.

1986-ல் நெக்ஸ்ட் இன் என்ற கணினி நிறுவனத்தை உருவாக்கினார் ஜொப்ஸ்! வித்தை தெரிந்தவனுக்கு எங்கிருந்தாலும் பிழைக்கத் தெரியு மல்லவா? பல்கலைக்கழகங்களுக்கு அவசியப்படும் உயர் தொழில் நுட்ப வசதி கொண்ட கணனியை உருவாக்கி 1989-ல் 6500 டொலருக்கு விற்பனைக்கு விட்டார்.

இதற்கிடையில் அப்பிள் நிறுவனத்தில் பல மாற்றங்கள் ஏற்படலாயின. அப்பிள் ஸ்தாபகரான ஸ்ரீவுடன் முன்பு தகராறு செய்திருந்த அப்பிள் நிறுவன அதிபர் அப்பிளை விட்டு 1993-ல் விலக்கப்பட்டார்.

இதற்கிடையில் தனது நிறுவனம் மென் பொருட்களை உற்பத்தி செய்வதிலேயே ஸ்ரீவ் அதிக நாட்டத்தைக் காட்டினார். கணனி உற்பத்தியை தனது நிறுவனம் உற்பத்தி செய்வதில்லை என்றும் தீர்மானமாயிற்று.

1995-ல் விண்டோஸ் 95 கணனி உலகில் புகுந்தது. மிகஇலகுவாக

இதையெல்லாம் கடந்து ஓகஸ்ட் 24-ம் திகதி தான் அப்பிள் நிறுவன அதிபர் (CEO) பதவியை ராஜினாமாச் செய்துள்ளதாக ஜொப்ஸ் அறிவித்திருந்தார். நிறுவனத்தின் தலைவராக (Chairman)தொடர்ந்து இருக்கச் சம்மதித்திருந்த அவர், இனிவரும் காலங்களை குக் என்பவரை அப்பிள் நிறுவன அதிபராக பொறுப்பேற்று நடத்துவார் என அறிவித்திருந்தார்.

இன்று திரும்பிய பக்கமெல்லாம் அப்பிளின் முத்திரையப் பதிக்க வைத்துள்ள சாதனைக்குரிய முழுப் பெருமையையும் இந்த அற்புத மனிதரான ஸ்ரீவ் ஜொப்ஸ் என்பவரையே சாருகின்றது. அசுர வளர்ச்சி கண்டுவிட்ட அப்பிள் நிறுவனத்தை இந்த அளவிற்கு கோபுர உச்சிக்கு கொண்டு வந்திருப்பவர் இந்த அற்புத மனிதர் தான்.

இவரது மரணம் குறித்து அப்பிள் நிறுவனம் தெரிவித்ததாவது;

ஜொப்ஸின் அறிவு, உற்சாகம் மற்றும் தொழிலில் அவர் காட்டிய ஆர்வம் ஆகியவைதான் இந்த நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்புகளுக்கு உந்துதலாக அமைந்தன.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கருத்து தெரிவிக்கையில்;

# பணியாற்ற சிறந்த நிறுவனம்...கூகுள்

Google™

பணியாற்ற சிறந்த நிறுவனமாக தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக உலகிலேயே இணையத்தள தேடல் நிறுவனமாக கூகுள் முதலிடம் பெற்றுள்ளதாக ஆய்வு முடிபு தெரிவிக்கின்றது.

மனித வளப் பிரிவில் சிறந்த நிறுவனங்கள் பற்றி ஆய்வு செய்யும் சர்வதேச நிறுவனம் யுனிவர்சம். ஆய்வின்படி இந்த ஆண்டின் ஊழியர்கள் அதிக மனநிறைவுடன் பணியாற்றும் உலகின் முன்னணி 50 நிறுவனங்கள் பட்டியலை அது தயாரித்தது.

அதில் தொடர்ந்து 3-வது ஆண்டாக முதலிடம் பிடித்தது கூகுள். பணியாற்ற ஏற்ற சூழல், திறமைக்கு மதிப்பு, உழைப்புக் கேற்ற அங்கீகாரம், ஊதியம் என எல்லா வகையிலும் திருப்தி அளிப்பதாக கூகுள் பற்றி இந்தியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், ரஷ்யா , ஸ்பெயின் , இங்கிலாந்து , அமெரிக்கா நாடுகளைச் சேர்ந்த 1.6 லட்சம் ஊழியர்கள் தெரிவித்தனர்.

பிரபல தணிக்கை நிறுவனமான கே.பி.எம்.ஜி.பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

மேலாண்மை கல்வி நிறுவன்ங்களில் பட்டம் பெற்றவர்கள் பணியாற்ற விரும்பும் நிறுவனமாக அது உள்ளது.

பொறியியல் பட்டதாரிகளின் தேர்வாக ஐ.பி.எம். உள்ளது.

பொறியியல் பட்டதாரிகள் பணியாற்ற விரும்பும் நிறுவனமாக மைக்ரோ சொப்ட் 3-வது இடத்தில் உள்ளது.

கார் நிறுவனமான பி.எம். டபிள்யூ (4), சிப் தயாரிப்பாளர் இன்ரெல்(5), மின்னணு நிறுவனம் சோனி (6), தொழில்நுட்ப நிறுவனம் அப்பிள்(7), ஜிஇ(8), சீமன்ஸ்(9) , பி அண்ட் ஜி(10) என முதல் 10 இடங்களில் உள்ளன.

# சிக்கலான தொழில்நுட்பத்தை பாமரனும் பயன்படுத்தச் செய்தவர் ஸ்ரீவ் ஜொப்ஸ்

Steve Jobs.. இவர்தான் அப்பிள் நிறுவனத்தை உருவாக்கியவர். மின்சாரத்தை அறிமுகப்படுத்திய எடிசன் முதல் பல விஞ்ஞானிகளை நினைத்து மகிழ்வு கொள்கின்றோம். இவர்கள் வரிசையில் ஸ்ரீவ் ஜொப்ஸ் என்ற இந்த அற்புத மனிதரும் வந்து சேர்ந்திருக்கின்றார்.

1955ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி பிறந்தவர் ஸ்ரீவ் ஜொப்ஸ்.

1972-ல் ஜொப்ஸ் போர்ட்லாண்டில் உள்ள ரீட் கல்லூரியில் இணைந்தார்.எனினும் முதல் செமஸ்டரிலேயே அதனை நிறுத்தி விட்டார்.

தன்னுடைய பள்ளி நண்பர் ஒருவருடன் இணைந்து 1976இல் அப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்தார். 1977-ல் சில முதலீட்டாளர்களுடன் இணைந்தது அப்பிள் நிறுவனம். அதே ஆண்டில் அப்பிள்2 ஐயும் அறிமுகப் படுத்தியது. வருடத்திற்கு ஒரு மில்லியன் டொலர் என்ற கணக்கில் அப்பிள் கணனி விற்பனை எகிறிக் குதித்தது.

1980இல் இந்த நிறுவனம் பொது மக்களை பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டது. இதன் மூலம் 110 மில்லியன் டொலர் தொகை சேர்ந்து முழு உலகையும் ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது.

1982இல் ஆண்டு விற்பனை ஒரு பில்லியன் டொலரை (ரூ.11 ஆயிரம் கோடி) தொட்டது.

பெப்சி நிறுவனத்தின் அதிபரை அப்பிள் நிறுவனத்தின் அதிபராக்கும் முயற்சியில் ஸ்ரீவ் வெற்றி கண்ட ஆண்டு 1983. புதிய அதிபரின் பெயர் ஜோன் சுலி. 1984இல் இன்று உலகு நன்கறிந்த மக் கணனிகள் விற்

கையாளக்கூடிய செய்முறைத் திட்டம் என்று கருதப்பட்ட விண்டோஸ் அறிமுகம் அப்பிளின் விற்பனையில் தாக்கத்தை உண்டு பண்ணியது.

1996இல் அப்பிள் நிறுவனம் ஸ்ரீவ் நடத்திய நெக்ஸ்ட் நிறுவனத்தை வாங்கியது. கொடுத்த விலை 430 மில்லியன் டொலர்கள். ஸ்ரீவ் தன் முயற்சியால் புதிதாகக் கொண்டு வந்த செய்முறைத் திட்டத்திற்காகவே இந்த நிறுவனம் விலைக்கு வாங்கப்பட்டது.

இதனால் நிறுவன ஆலோசராக, தான் தொடக்கிய அப்பிள் நிறுவனத்துக்குள் மீண்டும் நுழைந்தார் ஸ்ரீவ் ஜொப்ஸ். உள்நுழைந்த ஆண்டு 1997.

இதே ஆண்டில் இவர் இடைக் கால அதிபராகவும் நியமிக்கப்பட்டார்.

மீண்டும் அப்பிளின் வளர்ச்சி தொடங்கியது.1998இல் இலாபத்தைக் கண்ட அப்பிள் நிறுவனம், இன்று உலகைச் சூறாவளியாக பிடித்தாட்டும் ஐமக் அறிமுகப்படுத்தியது.

இடைக்கால அதிபராக இதுவரையில் இருந்து வந்த ஸ்ரீவ் ஜொப்ஸ் 2000-ம் ஆண்டில் அப்பிளின் அதிபரானார்.

இன்று மிக பிரபல்யமாகி விட்ட ipad 2001இல் முதல் தடவையாக விற்பனைக்கு வந்தது.

2004-ல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஜொப்ஸ் புற்றுநோய்க்காக சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

2007-ல் அறிமுகமாகியது இன்னொரு புதிய மின்னியல் சாதனமான ஐபோன் .இவற்றை வாங்குவதற்காக கடைகளுக்கு முன்பாக இரவு இரவாக மக்கள் காத்திருந்தமை உலகறிந்த அதிசமான நிகழ்வு.



ஜொப்ஸ் தமது வாழ்க்கையை மாற்றியவர்.ஒட்டுமொத்தமாக பல தொழில்களுக்கு புது அர்த்தம் தந்தவர். அவரது மரணம் குறித்து அவர் கண்டு பிடித்த கருவியிலேயே உலகின் பெரும்பாலானோர் தெரிந்து கொண்டனர் என்பதை விட அவருக்கு பெரிய அஞ்சலி எதுவும் இருக்க முடியாது என்றார்.

மைக்ரோ சொப்ட் அதிபர் பில் கேட்ஸ் கருத்துத் தெரிவிக்கையில்; ஸ்ரீவ் ஜொப்ஸ் செலுத்திய தாக்கத்தைப் போல உலகில் வேறொருவரைக் காண்பதுஅபூர்வம் என்றார்.

பேஸ்புக் நிறுவுனர் மார்க் சுகர்பெர்க், ஸ்ரீவ் ஜொப்ஸ் தனது நண்பர் மற்றும் ஆலோசகர் என்று குறிப்பிட்டு, நாம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் உலகை மாற்ற முடியும் என்று காட்டியதற்கு நன்றி என்று கூறியிருக்கிறார்.

அத்துடன் மேலும் பல உலகத் தலைவர்களும் அனுதாபங்களை வெளியிட்டுள்ளனர்.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6783.55 | 6698.83 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6045.11 | 5978.14 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 8,913.94

உயர்வடைந்த பங்குகள்(ரூ.): ஹரிச்சந்திர(2900.00),லாப் காஸ்(48.30), ஆஸிரி சென்ரல்(230.10),அபான்ஸ பினான்சியல்(81.60),ஈ-சனலிங்(9.70)

சரிவடைந்த பங்குகள்(ரூ.): அலைன்ஸ்(850.00), எஸ்.எம்.பி.லீசிங்(0.30),ரேடியன்ட் ஜெம்ஸ்(1[illegible]2.00),ரொம்சன் இன்ரனெட்(150.00), சிஎப்ஐ(300.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



## ஆன்மீகம் 6

## எதைச் செய்யினும் இலாபம் நினைக்காமல் அன்பினாலும் அறிவினாலும், நன்மை கருதிச் செய்ய வேண்டும்

இந்தியாவிலும் உலகின் பல் வேறு இடங்களிலும் கூட்டுறவு இயக்கங்களின் வரலாற்றை நாம் கவனித்தால், அவை தொடங்கிய போது அற்புதமாகச் செயற்பட்டன. சிறிது நாட்களுக்குப்பிறகு அரசாங் கத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டது.



இது நமக்கு நன்றாகத் தெரியும் எங்கு பார்த்தாலும் இப்படித்தான் நடந்திருக்கிறது. இரஷ்யாவில், சீனாவில் கம்யூனிசத்தை செயலாக்க முயற்சி செய்தார்கள். ஆனால் முடியவில்லை. இப்போது எல்லோ ரும் சந்தைப் பொருளாதாரத்தில் வந்து நிற்கிறார்கள். ஏனென்றால் இவ்வளவு தான் புரிந்து வைத்திருக்கி றார்கள். இன்னும் மனிதனின் இதயத் தில் தேவையான பக்குவம் வரவில்லை. மனிதனுக்கு இலாபம் கிடைத்தால் தான் ஈடுபாடாக, நல்ல முறையில் செயற்படுவான். இலாபம் இல்லை யென்றால் அவனுடைய அன்பால், அறிவால் வேலை செய் வதில்லை. ஈசாவின் நோக் கமே எத்தகைய செயல் செய்தாலும், அன்பினாலும், அறிவினாலும் இலாபம் நினைக்காமல், நன்மை நினைத்துச் செய்ய வேண் டும் என்பதுதான். ஆனால், உலகில் இதுபோன்று நடப் பதில்லை. இலாபம் இருந் தால்தான் மனிதன் வேலை செய்வான். எனவே ஏதோ ஒன்று நடத்தினால், ஒரு தொழில் அடிப் படை இருந்தால்தான் தொடர்ந்து நடக்கும். மற்றதெல்லாம் சில நாட்களுக்கு நடக்கும். அதற்குப் பிறகு போராட்டம் தான். இந்தக் கூட்டுறவு இயக்கங்கள் எல்லாமே இப்படித்தான். சில நாட்கள் நன்றாக நடக்கும். பிறகு அதில் அரசியல் நடக்கிறது.

கேள்வி: விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருளின் விலை நிர்ணயம் செய்வது பற்றித்தான். சத்குரு, இயற்கை விஞ்ஞானி நம்மாழ் வார், திரு.கார்த்திகேயன் இவர்க ளெல்லாம் ஒன்று சேர்ந்து அரசாங் கத்தை வலியுறுத்தி, விவசாயத்தைத் தொழிலாக்கி விட்டால், மற்ற நிறுவனங்கள் போலவே நாங்களும் விளை பொருளுக்கு விலை நிர்ணயம் செய்து விடுவோம் இதைச் செய்தாலே தமிழ் நாடு உன்னத நிலையில் இருக்கும்.

சத்குரு: வெளியிலிருந்து நிறுவனம் என்று சொல்லும்போது, வேறொரு விதமாக முழுமையாகப் பார்க்க வேண்டும். அதிலிருக்கிற மக்கள் எல்லோருமே பொருளாதாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நம் விவசா யிக்கு 100 ரூபாய் வருமானம் வருமிடத்தில் 200 ரூபாய் வந்தால், 200ரூபாயையும் செலவு செய்யத் தேவையில்லை. மிச்சம் இருக்கின்ற 100 ரூபாயைக் கொண்டு அந்த நிறுவனத்தின் பங்கை வாங்க முடியும். விவசாயிகள் சேர்ந்து நிறுவனத்தின் மொத்தப்பங்குகளையே வாங்க முடியும். தனிதனியாக வாங்க முடிய வில்லை என்றால் இந்த இயக்கத் திலேயே சேர்ந்து பங்கை வாங்க முடியும். ஒப்பந்தத்தில் இதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் நம்மால் அவர்கள் இலாபம் அடை கிறபோது, இத்தனை பங்குகள் தமிழக விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று முடிவு செய் வதற்கு முயற்சி செய்திருக்கிறோம். அதற்கான பேச்சுவார்த்தை நடந்தி ருக்கின்றது. இப்போது அந்த நிறுவனத்தில் உங்களுக்குப் பங்கி ருக்கும்போது, இலாபகரமாக நடந்தால் நல்லதுதானே? ஏனெனில் நிறுவனம் சம்பாதிப்பது மக்களுக் கும் சேர்த்துத்தானே? எல்லோ ருக்கும் அதில் பங்கு இருக்கிறது. விவசாயிகளும் ஈடுபட்டால் அவர் களுக்கும் இலாபம் இருக்கிறது.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும்

04

### அம்பாறையில் சில பழந்தமிழ் ஊர்ப் பெயர்கள்

அம்பளை ஏரி என்பது 1962 ஆம் ஆண்டுடன் அம்பாறை என மாற்றப் பட்டது பற்றி முன்னரே குறிப்பிப் பட்டது. அதிலும் தமிழ் இளை யோடுவதனால், பின்னர் திகாமடுல்ல என மாற்றப்பட்டு தேர்தல் தொகுதி யாக்கப்பட்டது. எனினும் அம்பாறை என இன்று அழைக்கப்படுகிறது. செங்கல் படை, மல்வத்தை, மல்கம் பிட்டி,வரிப்பத்தானை, தமனை, மடவல்லண்டை, பரக்காகொலனை, முந்தல், கடையந்தலாவை போன்ற தமிழ்க் கிராமப் பெயர்கள் மட்டும் நிலைத்துள்ளன.

இன்று தீகவாபி என்பது சர்ச்சை யைக் கிளப்பிக் கொண்டு இருக்கு மிடம் பண்டு பொன்னன் வெளி எனப்பட்ட கிராமம் ஆகும். பொன் னன் வெளி வயல்களில் அரை நூற்றாண்டு காலமாக முஸ்லிம் களே விவசாயம் செய்து வந்துள் ளனர். 12500 ஏக்கர், தீகவாபி விகாரைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் 7500 ஏக்கரில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கிழக்குக்கரையில் பட்டிப்பளையாறு என்னும் படுக்கையை அண்டி வாழ்ந்த மக்களின் நெற்செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் 1881இல் பட்டிப்பளை ஆற்று நீர்ப்பாசனத் திட்டத்தைத் தொடங்கினர். அம் பளை ஏரி என அழைக்கப்பெற்ற அம்பாறை கொண்ட வெட்டுவான், இறக்காமம் ஆகிய சிறிய குளங் களைப் புனரமைப்புச் செய்து தமிழ் மக்களிற்குக் கொடுத்தனர். டி.எஸ் சேனநாயக்கா முதலாவது பிரதம ரானதும் 1948ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆம் திகதி, பட்டிப்பளை என்ற தமிழர் நிலப்பரப்பு கல்லோயா எனப்பெயர் சூட்டப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். இக்கி னியாக்கல குளமும் சேனநாயக்க சமுத்திரம் எனப்பெயர்மாற்றம் பெற்றது. கல்லோயா அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. அமெரிக்கா வின் சார்பில் மொறிஸன் நட்ஸன் இன்டநேஷனல் காப்பிரேசன் சேர்ந்து குளத்தை அபிவிருத்தி செய்தனர்.[14]

கல்லோயா ஆரம்பிக்கும் முன்னர் தமனை, உகனை, தொட்டம், பாடா கோடை ஆகிய சில பகுதிகளில் சிங்கள மக்கள் மட்டும் வாழ்ந்தனர்.

"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

அம்பாறை, கொண்ட வெட்டுவான், இறக்காமம், வரிப்பத்தான் சேனை ஆகிய பகுதிகளில் தமிழ் முஸ்லிம் மக்களே வாழ்ந்தனர். இப்பகுதிக் காடுகளில் பழங்குடியினரான வேடு வர்களும், வனக்குறவர்களும் வேட் டையாடி வாழ்ந்தனர். 1961ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத் திலிருந்து ஐந்து பற்றுகள் பிரிக்கப் பட்டு 1963 ஆம் ஆண்டு பாணமைப் பற்று, அக்கரைப்பற்று , கரவாகுப் பற்று, சம்மாந்துறைப்பற்று ஆகிய தமிழர் பிரிப்புக்களும் வேகம்பற்று என்ற சிங்களப்பற்றும் அம்பாறை என ஆகின. 1981 ஆம் ஆண்டு 12 உதவி அரச பிரிவுகளும் ஐந்து சிங்கள் உதவி அரச பிரிவுகளாயின. அதே போன்று 1833 வரை மட்டக்களப்புடன் இருந்த விந்தனைப்பற்றும் அம்பாறையுடன் இணைக்கப்பட்டன.

### அம்பாறையின் தென்புறத் தமிழ்க் கிராமங்கள்

அம்பாறையில் தென்புறக் கிரா மங்களாக கொடுகொம்பனை, கல்மடு, நுவரக்கல், நிலோமை, புல்லுவெளி, கொக்கரிச்சேனை, ஒமுனை, சேமக்கல் குகை, கற்பூரெல்லை போன்ற பல தமிழ்க்கிராமங்கள் இன்றும் உள்ளன. அதே நேரம் நுவரக்கல் என்பது நுவரகல சிங்களப்பெயர் ஆகி விட்டது. ஏனைய பெயர்களை நோக்கினால், தமிழ் பெயர்கள் என புரியும்.

இது போன்று அம்பாறையின் தென் பகுதியின் எல்லைகளை அண்டிய இடப்பெயர்கள் கூட தமிழ்ப்பெயர்களைக் கொண்டிருந்தன.

### அம்பாறையின் எல்லைகளை அண்மிய தமிழ் பெயர்கள்

பொலநறுவை, பதுளை மாவட் டங்கள் அம்பாறையின் எல்லை களாகவுள்ளன. அம்பாறையின் எல்லையில் பள்ளத்தூரவெல்ல, பொலபெத்தை, எல்லைக்கோடு, வாரப்பிட்டி, குண்டுவின்ன, (குரு வித்த) தம்பலவின்னை, மரங் கல்லான்கமம், கொலவத்தலாவ, பதியத்தலாவ, கொக்குகல்மலை, கல்லோடை, நாவின்ன, சேரன் கடை கிணற்றுக்கல், தொலைக்கல்வெளி என அடிக்கிக் கொண்டே போகல லாம். இவற்றலே பதியத்தலாவை மற்றும் கொலவத்தலாவை போன்ற வற்றை அவதானித்தால் மாறிக் கொண்டு போகும் விதம் தெரியும். பருத்தித்தலவாய் என்ற சுத்தமான தமிழ் கிராமமே இன்று பதியத் தலாவை என முழுமையாக மாறி விட்டது.

பதுளை மாவட்ட எல்லையில் விலேகமம், வீரப்பொக்கணை, குருகும் புரம், கலைக்கும் புரம், தலவேகமம், எக்கிரியன் குளம் போன்ற கிராமங்கள் உள்ளன. அவை தமிழ்ப் பெயர்களை உடையன. எனினும் நாளடைவில் புரம் எல் லாம் 'புர' எனவும் குளம் எல்லாம் 'வில', 'வாவி' எனவும் மாற்றம் அடைவதில் எதுவித ஐயமும் இல்லை.

(தொடரும்)

செல்வி கதிர்காமன் தங்கேஸ்வரி

# புதிய உயர்கல்லூரி இயக்குநரும் 25 வருட உ
# இந்து நாகரிக விரிவுரையாளருமாகிய திருமதி சண்
# அவர்களின் சேவை நயப்பு விழா-

## அருள் ஆசிச் செய்தி



கல்விப் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் உயர்கல்வி நிறுவனத்தின் இயக்குநரும் பேராதனை பல்கலைக்கழக (வெளிவாரி)இந்து நாகரிகத்துறை விரிவுரையாளரும் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் இன்று மணிவிழா காண்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லோரும் கல்வி கற்க வேண்டும் என்ற வகையில் உயர்கல்வி நிறுவனத்தை அமைத்து அனைவரையும் கல்வியாளர் ஆக்கிய பெருமைக்குரியவர். இனிமையாக எல்லோரிடமும் பழகி அனைவரின் அன்பையும் பெற்றமை சிறப்புக்குரியது. இறைவல்லமையும் எடுத்த காரியத்தை செவ்வன செய்ய வேண்டும் என்ற மனவலிமையும் எல்லோரும் ஒழுங்காக பணியாற்ற வேண்டும் என்கின்ற மனவுணர்வைக் கொண்டவர். இவருடைய பணியின் ஊடாக இன்று உயர்நிலைக்கல்வி கல்லூரி புதிய கட்டம் அமையப்பெற்று புதிய நிலையில் பணியாற்ற அமைந்திருப்பது சிறப்படையது. இன்று அகவை அறுபதினை அடைந்திருக்கும் அம்மையார் அவர்கள் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ்ந்து பணியாற்ற வாழ்த்துகின்றோம். இவர்களின் பணியை கௌரவித்து விழா எடுத்து சிறப்பு செய்யும் கல்விசார் சமூகத்தினரை வாழ்த்துகின்றோம்.

திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களை இறைவன் ஆசிர்வதிப்பீராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

## தனித்துவமான ஆளுமை



புதிய உயர்கலைக் கல்லூரியின் நிறுவுநர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு பெரிதும் மகிழ்வடைகின்றேன். பெருமதிப்புக்குரிய ஆசிரியையின் ஆயிரக்கணக்கான விசுவாசமான மாணவர்களில் அடியேனும் ஒருவன். அதனை வாழ்வின் பெரும்பேறாக கருதுபவன்.

அம்மையாரிடம் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் உள்ளன. ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய விடயங்களில் மிகுந்த கண்டிப்பானவர். கற்பித்தல் திறன் ஆகியவற்றில் மிகுந்த நாட்டம் உள்ளவர். இந்து நர்கரிகத்தை கூட அறிவியற் பாடம் போல் மிகவும் தெளிவாக கற்பிக்கும் திறன் அம்மையாருக்கானது. பழகுவதற்கு மிகவும் இனிமையானவரான அம்மையார் மிகவும் எளிமையானவரும்கூட. அம்மையாரிடம் கற்ற நாட்களை எண்ணுகையில் இன்றும் மனது குதூகலிக்கிறது. வாழ்வில் சகல ஐஸ்வரியங்களையும் பெற்று அம்மையார் நீண்ட காலம் வாழ எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

பேராசிரியர் கி.விசாகரூபன்,
தலைவர் / தமிழ்த்துறை,
கலைப்பீடம்,யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## மணிவிழாக் காணும் ஆசிரியைக்கு எமது வாழ்த்துச் செய்தி

மாதா,பிதா,குரு, தெய்வம் என்னும் வரிசையில் தெய்வத்திற்கு முன்னிலையாக ஆசிரியர் விளங்குகிறார். அந்த வகையிலே எமது மண்ணில் ஆரம்ப காலம் தொட்டு இற்றைவரை தனது கல்விப் பணியினை சிறப்பான முறையில் மேற்கொண்டு வரும் விரிவுரையாளர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களது பணி போற்றுதற்குரியது.

இன்று தனது அறுபதாவது வயதில் மணிவிழாக்காணும் ஆசிரிய மணி ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர்கல்லூரியினை இருபத்தைந்து வருடமாக விரிவுரையாளராகவும் நிர்வாகியாகவும் சிறந்த முறையிலே நடாத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிபுகளினை மேற்கொண்டுவருகின்றார். அதன்மூலம் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வெளிவாரிப்பட்டம் பெறுவதற்கு உந்து சக்தியாகத் திகழ்கின்றார். மணிவிழாக் காணும் ஆசிரியைக்கு இவ்விழாவினையொட்டி வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு அவரிடம் பட்டப்படிப்பினை மேற்கொண்டவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைவதோடு அவரது கல்விப் பணி மென்மேலும் சிறக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறேன்.

க.ஸ்ரீமோகனன், உதவி அரசாங்க அதிபர், தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.

## அருள் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம், ஆரியகுளம், புதிய உயர் கலைக்கல்லூரி இயக்குநர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழாவைச் சிறப்பிக்க வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் நான் பேருவகை அடைகிறேன்.

1982-83களில் எனக்கு இந்து மதத்தின் சிறப்பைக் கற்பித்த இவர் இத்துறையில் எனது குரு. இவரிடம் நான் பாடம் கற்றபோது அம்மையார் கடைப்பிடித்த கற்பித்தல் முறைமையும், இவரிடம் காணப்பட்ட சிந்தனைத் தெளிவும், பண்பான நடத்தையும், பரந்த மனப்பாங்கும் இவர் மட்டில் ஒரு உயர்ந்த மதிப்பீட்டை என் மனதில் ஆழமாகப் பதித்தது. இந்து நாகரிகத்துறையில் மாணவர்களால் அதிகம் வேண்டப்படுகின்ற சிறந்த ஒரு விரிவுரையாளராக அம்மையார் திகழ்கின்றார். இவரிடம் விளங்குகின்ற கடின உழைப்பு, அயராத முயற்சி, பலருடனும் பண்புடன் பழகும் குண இயல்பு இவர் படிப்படியாக வாழ்வில் உயர்வதற்கு உதவியாயமைந்தன.

தமது கல்வி நிறுவனத்தின் பயிலும் மாணவ, மாணவிகளுடன் மரியாதையுடனும், பண்புடனும் பழகும் இவரிடம், கடந்த 29 வருடங்களாக பெரும் எண்ணிக்கையிலான மாணவ, மாணவிகள் பல்துறைசார் பாடங்களை கற்றுத் தம் வாழ்வில் உயர்ந்துள்ளனர். உயர்தர வகுப்பு மாணவர்கள் மட்டுமன்றி, யாழ்ப்பாணம், பேராதனை ஆகிய பல்கலைக்கழகங்களின் வெளிவாரி மாணவர்களும் கற்பதற்குத் தமது நிறுவனத்தின் வாய்ப்பை இவர் ஏற்படுத்தியுள்ளார். இன்று இக் கல்வி நிறுவனத்தில் 1000 இற்கும் அதிகமான மாணவர்கள் கற்பது இந்நிறுவனத்தின் சிறப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும், பிறநாட்டுப் பல்கலைக்கழகங்களின் பட்டப்படிப்புக்கள் குறித்தும் இந்நிறுவனம் போதிய கவனம் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆன்மீகம், அறிவு, ஆற்றல், அர்ப்பணம் நிறைந்த எனது ஆசிரியை பல்லாண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து கல்விப்பணியிலும், சமூகப்பணியிலும் சிறந்து விளங்க இவருக்கு இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

பேராசிரியர் வண. ஞா.பிலேந்திரன்
தலைவர்/ கிறிஸ்தவ, இஸ்லாமிய
நரகரிகத்துறைகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையின் வாழ்த்துச் செய்தி




கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இவரது கல்விப் பணியைக் கௌரவித்தும் ஊக்கமும் கொடுத்தவன் என்ற நிலையில் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் மணி விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி அருள்நங்கை யாழ்ப்பாணத்தில் புதிய உயர் கல்லூரி நிறுவனத்தின் உரிமையாளராகவும் இயக்குநராகவும் கல்வி போதனை செய்பவராகவும் இருக்கின்றார்.

உயர்கல்வி நிறுவனம் பல்கலைக்கழக அனுமதியை தவறவிட மாணவர்களும் உயர்கல்வியில் ஈடுபாடு கொண்டவர்களும் உயர்வு நிலை அடைவதற்கு அருள்நங்கையின் கடின உழைப்பும் அர்ப்பணிப்புமே காரணங்களாக இருந்தன.

மாணவர்கள் மீது அன்பும் கண்டிப்பும் கொண்டவர். மாணவர்களும் இவர் மேல் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சமூக சேவையிலும் பொது நலன்களிலும் தன்னையும் உயர்கல்வி நிறுவனத்தையும் ஈடுபடுத்தி பணியாற்றி வருகின்றார். அவர்களது பணி மேலும் சிறக்கவும் இவரும் இவரது குடும்பமும் சிறப்புப் பெற்று நீண்ட காலம் வாழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
முன்னாள் துணைவேந்தர்,
வாழ்நாள் பேராசிரியர்.



## பெருமைக்குரிய சகோதரியின் சேவை தொடரட்டும்

அன்புச் சகோதரி திருமதி அருள்நங்கை சண்முகநாதக்கு மாணவர்களால் சேவைநலம் பாராட்டு விழா எடுக்கப்படும் செய்தியறிந்து மகிழ்ந்தேன். *ரீச்சர்* என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் அருள்நங்கை சண்முகநாதனுக்கும் எனக்கும் 40 ஆண்டுகால நட்பு உண்டு.50 ரூபா சம்பளம் வாங்கிய நட்பு இன்று ஆயிரம் ஆயிரம் எடுத்தாலும் அன்றைய மகிழ்வை காண முடியவில்லை.

ஆசிரிய சேவைக்காக தனக்கு கிடைத்த வாய்ப்பையும் உதறித்தள்ளி அரசதிணைக்களங்களிலும் இந்து கலாசார அலுவலகத்திலும் கிடைத்த வாய்ப்பை நிராகரித்து மாணவர் உலகில் சிறந்த சேவை புரிந்து மாணவர் உள்ளத்தை வெற்றிகண்டார்.

பிறர்மேல் அன்பு, பழிபாவத்துக்கு அஞ்சும் பண்பு, பொது நலம், இரக்கம், உண்மையுரைத்தல் ஆகிய ஐந்து குணங்களும் சான்றாண்மை என்ற குணமாளிகையைத் தாங்கும் பெரும் தூண்களாகும். இத்தகைய தூண்களால் உயர்ந்த அன்புச் சகோதரியின் சேவை தொடரவும் மாணவச் செல்வங்களின் அன்பு மழையில் நனைந்தபடி இருக்கும் சுகத்தை தொடர்ந்து பெறவும் இறைவனை திருவருள் நாடியே பிரார்த்தனை செய்கிறேன்.

தேசபந், சொல்லின் செல்வர், இரா.செல்வவடிவேல்.

## நெஞ்சம் மறப்பதில்லை

மானிப்பாய் மகளிரில் கல்வி கற்று தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று கடந்த கால நூற்றாண்டு காலப் பகுதிக்கு மேலாக கல்வி உலகில் கால்பதித்து மணி விழாக்காணும் அன்பிற்குரிய நண்பி திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமையும் மகிழ்வும் அடைகின்றேன்.

கல்வி உலகில் இவர் ஒரு கலங்கரை விளக்கு. தொண்டு உலகில் இவர் ஒரு தூண்டாமணி விளக்கு. கல்வி கற்கும்





# உயர்கல்வித்துறையின்
# ...ண்முகநாதன் அருள்நங்கை
# ...ா-09.10.2011

## நிகரற்ற சேவையாளர்




தன் அறிவினாலும் ஆற்றலினாலும் அளவிட முடியா மாணவர்களை தம்வசப் படுத்திக் கொண்ட அருள்நங்கை மிஸ்சுடன் மூன்று தசாப்தங்களுக்கு மேல் கல்விப்புலத்தில் இணைந்து செயற்படும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. இந்து நாகரிகம் என்றால் அருள்நங்கை என்றே எல்லோருக்கும் தெரியும். ஆரியகுளம் சந்தியிலிருந்து பருத்தித்துறைமுனை வரையும் ஆரம்ப காலத்தில் உயர்தர மாணவர்களின் உள்ளங்களில் நிறைந்து அவர்களைப் பல்கலைக்கழகம் அனுப்பிய அவர் பின்னர் பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்களுக்கு வெளிவாரியாக கல்வியூட்டி பட்டதாரிகளாக்கும் பெரும் பணியை ஆற்றுவதோடு பல்கலைக்கழகத்திற்கு நிகரான புதிய உயர் கலைக்கல்லூரியை உருவாக்கி இலங்கைப் பல்கலைக் கழகங்களில் மாத்திரமல்ல இந்தியப் பல்கலைக்கழகங்களிலும் கலைமாணி வர்த்தகமாணி, விஞ்ஞானமாணினி, முதுமாணி போன்ற பட்டங்களை பெற வைக்கும் பெரு நிறுவனமாக இலங்கையிலேயே தலை நிமிர்ந்து நிற்கும். நிறுவனத்தின் விரிவுரையாளனாகவும் நிர்வாகியாகவும் பணி ப[illegible]ன்றமை த[illegible] மக்களின் பெரும் பேறாகும்.

மாணவர்களின் அறிவுப் பசியை போக்குவதோடு ஏழை, எளிய மக்கள் மீதும் கண்ணோட்டம் செலுத்தி கருணை காட்டும் அவரது சமூகப்பணியும் பெரியது. அவருடைய சேவையை நயந்து போற்றும் இவ் வேளையில் அவர் இன்னும் பல ஆண்டுகள் பேரோடும், புகழோடும் பெரும் பணி ஆற்ற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

"பெருமைக்கும் எனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்"

திருமதி மீரா அருள்நேசன்
(B.A,M.A,P.G.D.E)
உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்த்துறை),
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## ஆளுமை மிக்க ஆசிரியை




திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களது உயர்கல்வியில் எவ்வாறு பங்களிப்பு செய்யலாம் என்பதை நடைமுறையில் செய்து காட்டிய பெருமை இவருக்கே உரியது. அவரது கற்பித்தல் தொடர்பான ஆளுமையே இவரை விரைவாக உயர்வடைய வைத்தது என்றால் அது மிகையாகாது.

யாழ்ப்பாணம் மற்றும் பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு இந்து நாகரிகத்தை சிறந்த முறையில் கற்பிப்பதுடன் ஏனைய பாடங்களுக்கும் முன்னணி ஆசிரியர்களை இணைத்துக் கொண்டதன்மூலம் வெளிவாரிப் பட்டப்படிப்பிற்கான சிறந்த நிறுவனமாக உயர்கல்லூரியை மாற்றியுள்ளார். திருமதி அருள்நங்கை கொண்டிருந்த தலைமைத்துவப் பண்பு சக ஆசிரியர்களையும் கல்வி கற்கும் மாணவர்களையும் ஒரு குடும்பமாக இயங்க வைத்தது. அவரின் பண்பும் உறவும் உயர் கலைக்கல்லூரியை பல்கலைக் கழகமாக மாற்றுவதற்கு வழி சமைத்தது. இவரது கல்விப் பணி தொடர வாழ்த்துவதுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

பேராசிரியர்.க.தேவராசா,
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.


## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை



கல்விப்பணி கடவுள் பணி காலமெல்லாம் நன்றியோடு போற்றும் பணி இப் பணிகளில் ஈடுபட்டவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். யாழ் குடாநாட்டில் அருள்நங்கை சண்முகநாதன் மிகவும் பிரபல்யம் பெற்றவர். பல்கழைக்கழகம் உள்வாரியாக கற்க முடியாது போன மாணவர்களுக்கு கைகொடுத்து உதவியவர்களில் இவர் மகத்தானவர். இவரது மணிவிழா குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். பல நூறு மாணவர்களை பட்டதாரிகளாக சிறக்க இவர் ஆற்றிய பணி மறக்க முடியாதது. இந்தியாவில் பல்கலைக்கழகங்களோடு தொடர்பை ஏற்படுத்தி பட்டப்பின் படிப்புத்துறையில் இவரது உயர்கல்லூரி முத்திரை பதித்தமை பாராட்டுக்குரியது. ஏழை மாணவர்களுக்கு இரக்கப்படும் பண்புடையவர் இக்கல்வியலாளர். சீரும் சிறப்போடும் மேலும் பல்லாண்டு பல்லாண்டு வாழ இறைவனை பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

யாவர்க்குமாம் என்றும் இற்றைதானே
ஆறுதிருமுகன், தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## தொடரட்டும் சமுதாயப்பணி



கல்விப் பாரம்பரியத்தைத் தொடர்ந்து தங்கவைப்பதில் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் தன்னால் இயன்றளவு சேவையாற்றியுள்ளார். வெளிவாரிப் பட்டப்படிப்புக்களில் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் வாழ்வின் பெரும்பகுதியை அர்ப்பணித்துள்ளார். இத்துறையில் அவரை இந்து நாகரிகத்துறை விரிவுரையாளராக முதன்முதல் இந்த மண்ணுக்கு அறிமுகப்படுத்தியவன் என்ற வகையில் அவரது கல்வி தொடர்பான கடந்தகால விடயங்கள் நான் நன்கு அறிவேன். அவரோடு இணைந்து ஏறக்குறைய 20 வருடகாலங்கள் விரிவுரை ஆற்றியவன் என்ற வகையிலும் கல்விக்கு அவர் ஆற்றிய பணியை நான் அறிவேன்.

உயர்கல்வி வாய்ப்புக்கள் மறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்ட நிலையில் எம்மாணவர்களுக்கு அவ் வாய்ப்பைத் தொடர்ந்தும் இடையூறு இன்றியும் வழங்கிவருபவர் அவர். ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்க களம் அமைத்துக் கொடுத்தவர் அவர். பல நிறுவனங்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டபோதும் அவை காலத்தால் அள்ளிச் செல்லப்பட்டோ அல்லது நிலைபெற முடியாதிருந்த நிலையில் அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நிலை என்று கூறக் கூடிய வகையில் புதிய உயர்கல்வியை அமைத்து தொடர்ச்சியாக கல்விப் பணியாற்றி வருகிறார்.

மாணவர்களிடையே என்ன செய்வது என்ற ஓர் அங்கலாய்ப்பு உள்ளது. அந்த அங்கலாய்ப்பை ஈடுசெய்யும் வகையில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்களே தஞ்சம் என்ற வெளிவாரி மாணவர்கள் கூட கல்வியிலே தஞ்சம் அடைவதற்கு நிழற்குடையாக திருமதி அருள்நங்கை சண்முகநாதன் காணப்படுகின்றார்.

விரிவுரையாற்றுகின்ற போது திருமதி அருள்நங்கை சண்முகநாதனின் குரல் மாணவர்களைப் பெட்டிப் பாம்பாக கட்டிப் போட்டுவிடுகின்றது. சமூகத்தின் புதிய துறைசார்ந்த உயர்வுக்கு வழிசமைத்துக் கொடுக்கின்றார். நல்ல விரிவுரையாளரை அல்லது ஆசிரியரை மாணவர்கள் தமக்கு மாதிரியாக எடுத்துக் கொண்டு வாழ்வார்கள். அது பண்டைக்காலம் தொட்டே இருந்து வருகின்ற ஒரு பண்பாகும்.

திருமதி அருள்நங்கை சண்முகநாதன் பல மாணவர்களுக்கு இன்று மொடல் ஆகவுள்ளார். மாணவர்களின் உள்ளத்திலும் சமூகத்தின் மதிப்பிலும் நிறைந்து நிற்கும் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள் மணிவிழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் உங்கள் பணி தொடர்ந்து ஓங்கவும் அதன்மூலம் சமுதாயம் தழைத்தோங்கவும் எல்லாம்வல்ல சந்நிதி வேலனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

அ.குமாரவேலு,
இயக்குநர், பட்டதாரிப் பிரிவு,
யாழ்ப்பாணக் கல்லூரி,
யாழ்.பல்கலைக்கழகம்.

...காலத்திலே அவரது அயராத முயற்சி, தன்னம்பிக்கை பல்கலைக்கழகம் வரை கொண்டு சென்றது.

அன்பும் பண்பும் ஒழுக்கமும் நிறைந்த எனது நண்பியை இன்று கல்வி உலகம் அவரின் சேவையைப் பாராட்டி மணிவிழா கொண்டாடுவது பொருத்தமானதே. ஆயிரம் ஆயிரம் பட்டதாரிகளை உருவாக்கி அவர்களது நல்வாழ்வுக்காக வழிகாட்டியாக ஒளியாக விளங்கி வருகின்ற இவரை பாராட்டுவதோடு மேலும் பணி சிறக்க எமது பாடசாலை முன்றலில் வீற்றிருக்கும் முருகப் பெருமான் அருள் பாலிக்க வேண்டி அமைதியும் மன நிறைவும் கொண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி ந. ஜெயவீரசிங்கம்,
அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி.

## ஏ-9 வீதி நான்கு வழிப் பயண வீதியாக புனரமைப்பு

கிளிநொச்சி நகர் மற்றும் பரந்தன் நகர ஏ 9 வீதிகள் புனரமைப்பு பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.

இவ் வீதி அபிவிருத்தி பணிகளில் முக்கிய அம்சமாக கிளிநொச்சி நகரிலுள்ளதும் வடபகுதியிலுள்ள முக்கிய பாலங்களில் ஒன்றானதுமான கரடிபோக்கு பாலம் உட்பட இப்பகுதியில் உள்ள பல பாலங்களும் தற்போதைய நவீன வீதி அமைப்புக்களுக்கு அமைவாக மிகவும் அகலப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன் கிளிநொச்சி நகர் ஏ9 வீதி நான்கு வழி பயண வீதியாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. பளை நகர பகுதியிலும் ஏ-9 வீதி நான்கு வழிப் பயண வீதியாக மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

பளை நகரப் பகுதியில் ஏ-9 வீதியை அண்மித்து வடிகால் அமைப்பு வசதியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனையிறவு கடலை ஏ-9 வீதிப் பகுதியில் மூடி வீதியமைக்கும் பணியும் துரித கதியில் இடம் பெற்றுவருகிறது. (4-2)

## பருத்தித்துறை–யாழ்ப்பாணம் கடுகதி பஸ்சேவை ஆரம்பிக்க முடிவு

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு கடுகதி பஸ் சேவை பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கடுகதி பஸ் சேவைக்கென இரு புதிய பேருந்து வண்டிகளை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்ய பருத்தித்துறை டிப்போ நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

போதிய பேருந்து வண்டிகள் இன்மையால் பருத்தித்துறை -யாழ்ப்பாணம் பிரதான பாதையில் சீரான முறையில் சேவைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் பேருந்து சேவையினை ஆரம்பிப்பதன்மூலம் பயணிகளின் சேவையை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1970 காலப்பகுதியில் நடத்தப்பட்ட கடுகதி பேருந்து சேவை போன்று ஒரு மணித்தியாலயத்திற்கு ஒரு தடவை பருத்தித்துறையிலிருந்தும் யாழ்ப் பாணத்திலிருந்தும் சம நேரத்தில் கடுகதி பேருந்து வண்டிகளை சேவையிலீடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (4-2)

## கைவிடப்பட்ட நிலையில் மூன்று சிறுமிகள் மீட்பு

(அநுராதபுரம்)

தம்புள்ள பிரதேச வீடொன்றில் கைவிடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட 3 சிறுமிகளை பொலிஸாரிடம் அயலவர்கள் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர். இச்சிறுமிகள் 2 வயதுக்கும் 9 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

இச்சிறுமிகளின் தந்தை குடும்பத்தினரை கைவிட்டு வேறொரு பெண்ணுடன் வாழ்வதாகவும் இவர்களின் தாயார் அளவுக்கதிகமாக மருந்தொன்றை உட்கொண்டதால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

இம்மூவரில் மூத்தவரான இரு சிறுமிகளை பாடசாலைக்கு அனுப்புவது குறித்து பெற்றோர் அக்கறையின்றி இருந்துள்ளதாகவும் இச்சிறுமிகள் குடும்பப் பிணக்கினால் பாதிக்கப்பட்ட அப்பாவிகளாக உள்ளனர் எனவும் பெண்கள் மற்றும் சிறுவர் பணியகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறினார்.

இச்சிறுமிகளை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு முன்னர் அயலவர் ஒருவர் இரு தினங்கள் இவர்களுக்கு உணவு வழங்கியதாகவும் மேற்படி அதிகாரி கூறினார்.

இச்சிறுமிகளை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அதிகாரிகளிடம் கையளிப்பதற்காக நீதிமன்ற உத்தரவொன்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் தம்புள்ள நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-2)

## கடல் வெள்ளரிகள் சேகரிப்பில் ஈடுபட்ட 9 பேருக்கு அபராதம்

சட்டவிரோத கடல் வெள்ளரி சேகரிப்பில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட 9 பேருக்கு திருகோணமலைநீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

திருகோணமலை நீதிவான் யு.எல்.ர. அடிசாரினால் நேற்று முன்தினம் குறித்த நபர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் திருகோணமலை உள்துறைமுகம் பகுதியில் கடல் வெள்ளரிகளை சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டனர்.

150 கடல் வெள்ளரிகளுடன் கைது செய்த துறைமுக பொலிஸார் இவர்களைநீதிமன்றில்முன்னிலைப்படுத்தினர்.

இந்த நிலையில், குறித்த சந்தேக நபர்களுக்கு 3 ஆயிரம் ரூபா உடன் அபராதமும் எஞ்சிய தொகையை எதிர் வரும் 3ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்எனஉத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கடல் வெள்ளரிகளை அழிக்கவும் பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (4-2)

## பின் தங்கிய பிரதேசங்களுக்கான நனகொனபியஸ திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

தூர இடங்களிலுள்ள நூல் நிலையங்களை தரம் உயர்த்துவதற்கான திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்று ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நனகொனபியஸ என்ற இந்தத் திட்டத்தின் நோக்கம் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மாணவர்களுக்கு புத்தகங்களையும் ஏனைய வசதிகளையும் வழங்குவதாகும்.

மேலும் செயலாளர் தெரிவிக்கையில், இந்தத் திட்டத்திற்கு ஒறின்லங்கா நிறுவனம் நிதியுதவி வழங்குகிறது என்று கூறினார்.

அதேவேளை ஒவ்வொரு நூல் நிலையத்திலும் ஏழு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் தேசிய பொறியியல் நிறுவகம் புனரமைக்கப்படவிருக்கிறது.

மொனறாகலை மாவட்டத்தில் மாத்திரம் 27 நூல்நிலையங்கள் அமைக்கப்படும். இந்தத் திட்டத்திற்கு தேசிய சிவில் பாதுகாப்புப் பிரிவும் உதவயிருக்கிறது. (4-2)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சிட்டுச் சிறுவர்

சிறுவனாய் சிறுமியாய்
சிட்டுக்களாம் சிறுவரை
சீராட்டும் சமூகம்
வழிகாட்டி நிற்கும்..

ஆசிரியர் பெற்றோரால்
அரவணைத்த இவர்களை
புலமைப்பரிசுப் பரீட்சை
வேறுபாட்டை விதைக்கும்

புகைப்படமும் பாராட்டும்
வாழ்த்துக்களும் பிரசுரித்து
குறைந்தளவு சிறுவர்களில்
பாடசாலை பெருமை கொள்ளும்

கெட்டித்தனம் இருக்கட்டும்
சமத்துவமும் நிலை பெறட்டும்
வீட்டில் ஒளிரட்டும்
வகுப்பறையில் மிளிரட்டும்
நாளைய தலைவர்கள்
தங்கங்களே எம் சிறார்கள்

அ.பூவானந்தன்
வயாவிளான்

### உனக்காக...

ஏக்கப் பெருமூச்சுடன்
இமைமூட மறுக்கும்
இரவுகளில் கூட
உனக்காக காத்திருக்கிறேன்-உன்
நினைவுகளைச் சுமந்தபடி

எம். திவ்வியா,
சங்கானை

### மகிழ்ச்சி

வசந்தகாலத் தென்றலாக
தவழ்ந்துவரும் உன் இனிய கானம்
என்னை உற்சாகப்படுத்திய போதுதான்
என் வீட்டுப் பூக்களெல்லாம்
கவிதை படித்தன இசையோடு

செல்வமலர்
சிறுவர் இல்லம், திருநெல்வேலி

### நிமிர்ந்து நில்

மலரும் மொட்டுக்கள்
மலர்ந்த வண்ணமே
இருக்கட்டும் நாளைய
தலைமுறை எம்மை
அண்ணார்ந்து பார்க்கட்டும்
இப்படியா வாழ்ந்தான்
தமிழன் என்று

இ.இளங்கிரன்
யா/ஆவரங்கால் ந.ரா.வி

### அவரவர் பார்வையில்

காத்திருப்பு
பசியினில் நான் தவிக்கையில்
பக்கத்திலே பாலிருக்கிறது-அது
என் பார்வைக்கு மட்டும்தானா!
மற்றவன் புசிப்பதை -நான்
பார்த்துப் பசிதீரவா!
தட்டிப் பறிப்பு
நாணயத்தின் இருபக்கங்களாய்
நானும் நீயும் பிறந்ததனாலா
நாணயக் கயிறு பூட்டி-இங்கு
நான் தவிக்கையில்-நீ
நன்றாக உண்ணுகின்றாய்...
அரவணைப்பு
அன்னை என்னும் மூன்றெழுத்தாய்-நீ
அமைந்து விட்டதனாலோ-வாய்மூடி
அன்னமதை நாம் உண்ண
ஆவலோடு வரிசையில் நிற்க
அசையாமல் நிற்கின்றாய்-உன்
அரவணைப்பான பார்வையுடன்
நம்பிக்கை
பெற்றவளிடம் பாலுண்ணக்கூட
பெருந்தடையோ இங்கு-எம்மை
கட்டிவைக்க எத்தனை
கயிறுகள் தான் இங்கு-ஆயினும்
காத்திருக்கிறேன் எனக்கும்
விடுதலை கிடைக்கும் என்ற
கடுகளவு நம்பிக்கையில்

எல்.மேரி
பாசையூர்

### விடைகொடுங்கள்

தங்குமிடம் அமைத்து
தங்கவிடங்கொடுத்து
வழி மாறும் வனிதையரை
வரவேற்று-வழிகாட்டி
பொருளீட்டும் வஞ்சகரே
பட்டாடையில் மறைந்து
பஞ்சமா பாதகத்தை
அஞ்சாமல் செய்கின்றீர்
முத்தமிழில் மூழ்கி-எம்
சொத்தாக மிளிர்ந்தவர்கள்
கற்றதெல்லாம் மறந்து
கறைபடிந்து வாழ்வதற்கு
வித்திடும் வீணர்களே
கேடுகெட்டுத் தேடும்
குறுக்கு வழியதற்கு
விடைகொடுத்து வாழ்ந்திடுவீர்

ந.சந்திரலிங்கம் அச்சுவேலி.

### அகதிகள் என்பதால்...

இருந்ததை மறந்து
இருப்பதோடு வாழ்கின்றோம்
நிஜங்கள் மறந்து
நினைவுகளோடு வாழ்கின்றோம்
அன்பை மறந்து
அடிமைகளாய் வாழ்கின்றோம்
உரிமை மறந்து
உயிருக்காய் வாழ்கின்றோம்
கனவுகள் மறந்து
காட்சிப் பொருளாய் வாழ்கின்றோம்
காயங்கள் மறந்து
கல் மனதாய் வாழ்கின்றோம்
வருங்காலம் மறந்து
உயிர் உள்ளவரை வாழ்வோம்

அம்மு, வல்வை

### இமயம் தொட...


இறைவனுக்கு சமர்ப்பணமாகும்
மலர்களோ மலரும் போதும்
அவன்தாள் சமர்ப்பணமாகும் போதும்
மௌனமாயே இருக்கின்றன
சமர்ப்பிக்கும் மனிதனோ
மனிதம் மறந்து
குதிக்கின்றான் பூமியில்
மலரும் மலர்கள் புனிதமானவை
பறிக்கும் மனிதனோ....?

மாவை நா.கஜேந்திரன்

### வேண்டும் மாற்றம்!

நயவஞ்சகமான உலகம்
நம்ப வைத்து கழுத்தறுக்கும் கூட்டம்
நரம்பில்லா நாவால்
நளினக் கதைகள் வேறு
நக்கல் நையாண்டி
நடிப்பு அத்தனையும் உருக்கொண்ட
நஞ்சு உள்ளங்கள் கூட
நம்ம உலகத்தில்
நம்பநட நம்பி நடவாதே
நல்லகாலம் கெட்டுப்போச்சு
நல்லதெல்லாம் செத்துப்போச்சு-ஏன்
நல்ல தண்ணி வற்றிப்போகும்
நாள் கூட தொலைவில்லை-ஆனால்
நல்லவனைத் தேடாதே-நீ
நல்லவனாய் மாறிக்காட்டு
நம்முலகம் மாறிவிடும்
நாளடைவில் நல்லபடி

கே.எஸ்.ரமணி
யாழ்.பல்கலைக்கழகம்



## மௌனத்தின் தேடல் - 91

### மாற்றான் தாய்

ஈன்ற கன்று
இருவரில் ஒருவருக்கு
ஊட்டிடும்
தாய் நாட்டினில்
மொழி இரண்டு
நாம் படும் பாடு .
மாற்றான்தாய்
மனப்பாங்குதானே

மா.கிருபாகரன், பண்ணாகம்

### அன்பின் அடையாளம்

காலைக் கழுத்தைக் கட்டி
பாலைக் கறந்த போதும்
கன்றுக்குத் தன்பாலை ஊட்டும்
அன்பின் உருவான
இப் பசு

க.அருமைநாயகம்
குளப்பிட்டி

### பாசம்

நன்றாய் நலமுடன்
வாழ பால் தரும் பசு
இன்றும் மனிதருக்கு
ஒரு பெரும் செல்வம்
கன்றும் தாயும் காட்டும் பாசம்
அன்பு அம்மாவிற்கே
உரிய உதாரணம்

க. அபர்ணா
வட்டுக்கோட்டை.

### பிள்ளையின் அருமை

ஐந்தறிவு படைத்த இந்தத் தாய்க்கு
தன் பிள்ளையின் பசி தெரிகிறது-ஆனால்
ஆறறிவு உள்ள தாய்மாரோ
இந்த நாகரிக அழகுக்காக-பிள்ளையின்
பசியை உதறித் தள்ளுகிறார்கள்

யோ.விதுர்ஷன்
இரும்பு மதவடி

### தாய்மை

பெற்ற பொழுதில்
பெரிதுவந்து
அன்பு மழை பொழியும்
பெண்மையின்
பெருந்தன்மை...

வா.ஜெயபிரசன்னா
யா/ ஹாட்லிக் கல்லூரி

### தஞ்சம்

பசுஞ் சோலையான- ஈழத்தில்
வந்தது உனக்கொரு பஞ்சம்
பாலைவனத்தில் கிடைத்ததா தஞ்சம்

இ.சோபிகா
யா/கோ/ இ/ சி/ ம/ வி.

### கவனம்

தாயைத் தேடி சேய் நீயும்
தவிக்கின்றாயோ?
பாவபுண்ணியம் பலபேசி
பாதுகாக்கவென
பலபேர் வருவார்கள்
கவனமாய் இரு...

இனியா, நல்லூர்

### தவிப்பு

அடுத்தவரை அடக்கி
அவதியுற வைத்து
அனுபவிக்கும் சுகபோகம்
"ஆ" இனமே
உனக்குள்ளுமா?

யாழ்நிலா.
யாழ்ப்பாணம்.

### அதிசயம்

அமெரிக்காவின் அதிசயம்
இரண்டு தலைகளையுடைய பூனை
எங்கள் யாழ்ப்பாணத்தில்
அதிசயம் இரண்டு
கன்றுகளை ஈன்ற இந்தப் பசு

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை.

### இரக்கம்

பன்றிக்கு பால் கொடுத்த
பரமசிவன் இன்று பசுவாக
கன்றுக்குப் பால் கொடுக்கிறாரோ?

புவனா
வடவரணி

### ஏன்...?

ஐந்தறிவு ஜீவனுக்கு உள்ள
பாசம் இன்று இவ்வுலகில்
பெற்ற குழந்தைகளை
குப்பைத் தொட்டிக்குள் வீசும்
தாய்மார்களுக்கு இல்லையே

ஜெ.டெனீஸ், மல்லாகம்

### நாகரிக நங்கை

தாய் முலை அன்னையது- என
உன் கன்றுகள் ஓடி
வரும் வேளையில்- நீ
பால் ஊட்ட மறுப்பதேன்
ஓ... நீயும் இன்றைய
நவநாகரிக நங்கையோ?

நெய்தல்
தேன்மொழி

### மகத்துவம்

பால் குடிக்கும் கன்றோ
பார்த்திருக்கும் கன்றோ
உண்மையில் உலக
மகத்துவம் பெறுகிறது

யோ.யாழவன்
யா.நெல்லியடி.ம.ம.வி

### பரிதாப நிலை

பகிர்ந்துண்டு வாழும்
காக்கையின் பண்பு கூட
உனக்கில்லையா பசுவே
பசித்த கன்று பார்த்திருக்க
உன் கன்றுக்கு மட்டும்
பால் கொடுப்பது நீதியா?

துரை, தென்மட்டுவில்.

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 92

**அன்பு வாசகர்களே !**



உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 14.10.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# இருப்பாய் தமிழா நெருப்பாய்!

11

தமிழருவி மணியனின் அதிரடித் தொடர்





உருண்டோடும் காலப் பெருவெளியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே யாதும் ஊரே; யாவரும கேளிர் என்று சொல்லிச் சென்றவன் கணியன் பூங்குன்றன். உலகம் முழுவதையும் அரவணைக்கும் விரிந்த உள்ளம் தமிழனுக்கு என்றும் உண்டு என்பதற்கு அந்தக் கவிஞனின் கூற்றே சரியான சான்று. உலகையே தன்னுடையதாக உணர்ந்து பழகிய தமிழன் தான் பிறந்த மண்ணின் ஒரு பகுதி தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட போதும் தன்னிருப்பை நெருப்பாக்கவில்லை.

கச்சதீவு உட்பட ஏழு தீவுகளும் 69 கடற்கரை கிராமங்களும் இராமநாதபுரம் பகுதியைப் பரிபாலனம் செய்த சேதுபதி மன்னரின் ஆளுகைக்குட்பட்டிருந்ததை வரலாற்று ஆவணங்கள் சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிப்படுத்தின. இன்னும் எத்தனையோ சரித்திர சாட்சியங்கள் இருந்தும் என்ன பயன்? நம் கண் முன்னால் கச்சதீவு பறிபோய்விட்டது.

இந்திராகாந்தியும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி கச்சதீவு இலங்கைக்கு 1974இல் தாரை வார்க்கப்பட்டது.



இவ்வொப்பந்தம் தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதே தவிர, இன்றுவரை தீர்மானமாக நிறைவேற்றப்படவில்லை. தான் சம்பாதித்த சொத்தாகிய ஆனந்த பவனத்தை மோதிலால் நேரு நாட்டு மக்களுக்கு வழங்கினார். ஆனால் இந்திராகாந்தி இந்தியாவுக்குச் சொந்தமான கச்சதீவை தன்னுடைய சொந்த சொத்தாகப் பாவித்து பண்டாரநாயக்கவுக்குப் பரிசாகத் தந்து பரவசமடைந்தார். அப்போதைய தமிழக முதல்வர் கலைஞர் சட்டமன்றத்தில் கச்சதீவு ஒப்பந்தத்தை எதிர்த்து ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முதல்வர் கலைஞர் கச்சதீவைப் பறிகொடுத்துவிட்டார். நான் ஆட்சிக்கு வந்தால் கச்சதீவு மீட்டெடுக்கப்படும் என்று எம்.ஜி.ஆர். முச்சந்திகளில் நின்று முழங்கினார். மக்கள் எம்.ஜி.ஆர். விரும்பியபடி அவரை முதல்வராக்கினர். ஆனால் மக்கள் விருப்பப்படி கச்சதீவு மீட்டெடுக்கப்படவில்லை.




## நான் ஆட்சிக்கு வந்தால் கச்சதீவை மீட்பேன்
## எம்.ஜி.ஆர். அன்று முச்சந்திகளில் நின்று முழங்கினார்

ஜெயலலிதா இரண்டாவது முறை முதல்வராக இருந்தபோது 2004இல் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இந்திய அரசு இலங்கையிடமிருந்து காலவரையறை இல்லாமல் கச்சதீவைக் குத்தகைக்குப் பெறவேண்டும் என்று வலியுறுத்தினார். அவருடைய கோரிக்கையை பிரதமர் பொருட்படுத்தவில்லை. ஆட்சியை இழந்தபின்பும் ஜெயலலிதா 2008இல் உச்சநீதிமன்றில் கச்சதீவு ஒப்பந்தத்தை எதிர்த்து வழக்குத் தொடுத்தார். பெருபாரி வழக்கில் உச்சநீதிமன்றம் 1960இல் வழங்கிய தீர்ப்பை ஆதாரமாக்கி அவருடைய வழக்கு வைக்கப்பட்டது.



இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்த பின்பும் பெருபாரி மேற்கு வங்கத்தின் ஒரு பகுதியாகவே நீடித்தது. அது 8.75 சதுரமைல் பரப்பளவு கொண்டது. அதில் 12 ஆயிரம் பேர் அப்போது குடியிருந்தனர். பாகிஸ்தான் 1952இல் பெருபாரியைக் கேட்டு பிரச்சினையை உருவாக்கியது. ஒரு பேச்சுவார்த்தையின் விளைவாக நேருவின் அரசு ஓர் ஒப்பந்த அடிப்படையில் செப்டெம்பர் 1958இல் பெருபாரியை பாகிஸ்தானுக்கு விட்டுக்கொடுத்தது. பெருபாரி வழக்கில் உச்ச நீதிமன்றம் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் இந்தியாவின் எந்தப் பகுதியையும் வேறொரு நாட்டுக்குத் தாரை வார்க்க முடியாது எனத் தீர்ப்பைத் திட்டவட்டமாக வழங்கியது. இத் தீர்ப்பை மதிக்காமல் இந்திராகாந்தி இலங்கைக்குக் கச்சதீவைச் சீதனப் பொருளாக்கியது அரசமைப்புச் சட்டப்படி பெருங்குற்றம்.

எந்தவொரு நாடும் தனக்குச் சொந்தமான ஒரு சின்னஞ்சிறு தீவைக்கூட இழக்க விரும்பாது. ஆர் ஜென்டீனா 1982இல் நடந்து முடிந்த போரில் இங்கிலாந் திடம் போக்லாந்து தீவை இழந்தாலும் இன்றுவரை அதன் உரிமைக்குக் குரல் கொடுக்க



மறக்கவில்லை. மறதிக்குப் புகழ்பெற்ற நம் வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவோ கச்சதீவு ஒப்பந்தம் ஏற்கனவே இறுதி செய்யப்பட்ட விடயம். தகுந்த காரணமின்றி இரு நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய இயலாது என்று மக்களவையில் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

கச்சதீவு வருவாயைக் கணக்கு வைப்பதற்காகவே இராமநாதபுரம் அரசரின் இராமநாத விலாசத்தில் தனி எழுத்தாளர் இருந்ததை நம் மத்திய அமைச்சர் கிருஷ்ணா அறிந்திருக்க நியாயமில்லை.

இன்றுவரை 500இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களின் உயிர் பறிபோய்விட்டது. 2 ஆயிரம் மீனவர்கள் படுகாயமுற்றனர். இந்தியப் பெருங்கடல் அமைதிப் பிரதேசமாகவிருக்க இந்திய அரசு இலங்கையின் கருணைக்காகக் கைவலிக்கச் சாமரம் வீசுகிறது. தமிழக அரசு தீர்மானம் போடுகிறது. அரசியல் கட்சிகள் வாய்ப்பந்தல் போடுவதில் போட்டியிடுகின்றன.

இளைஞர்கள் நடிகர்களின் கட்-அவுட்கள் முன்பு காவலிருக்கின்றனர். எம் தமிழர் கூட்டம் இலவசங்களுக்குக் கையேந்தி நிற்கின்றது.


மழை பெய்கிறது; ஊர் முழுவதும் ஈரமாகிவிட்டது. தமிழ் மக்கள் எருமைகளைப் போல் எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்; ஈரத்திலேயே உட்காருகிறார்கள்; ஈரத்திலேயே நடக்கிறார்கள்; ஈரத்திலேயே உறங்குகிறார்கள்; ஈரத்திலேயே சமையல்: ஈரத்திலேயே உணவு; உலர்ந்த தமிழன் மருந்துக்குக்கூட அகப்படமாட்டான் என்று சரியாகத் தான் சொன்னான் பாரதி.

(ஞாயிறு பொறி பறக்கும்)

இருப்பாய் தமிழா நெருப்பாய் அதிரடித் தொடர் சீமான், காசியானந்தனைத் தொடர்ந்து தமிழக எழுத்தாளர் தமிழருவி மணியனால் எழுதப்படுகின்றது. (ஆ-ர்)

# கட்சியின் நிலைப்பாடு குறித்து இந்திய அரசுடன் பேசுவோம்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சியின் நிலைப்பாடு குறித்து இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றது என்பது தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள இந்திய வெளிவிவகார செயலாளர் ரஞ்சன் மத்தாயுடன் இந்த விடயங்கள் குறித்து பேசப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துடன் நடத்தப்பட்டு வரும் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளில் பாரிய முன்னேற்றம் ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தீர்வுத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தைகளை விடவும் அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் கூடுதல் முனைப்புக் காட்டி வருவதாகத் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டதாகவும் அடுத்த சுற்று பேச்சுவார்த்தைக்கான திகதிகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு தொடர்பில் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் இணக்கப்பாடுகள் உத்தேச பாராளுமன்றத் தெரிவுக்குழு யோசனையில் உள்ளடக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் முதலில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் எனவும் பின்னர் அது பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இல்லையெனில் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏனைய தரப்பினர் இதனை எதிர்த்தால் என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அரசாங்கம் நினைத்தால் எதிர்ப்பை முறியடிக்க முடியும் என சுரேஸ் பிரமேச்சந்திரன் தெரிவித்துள்ளார். (4-2)

# நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண நிலைய மண்டபத்தில் தலைவர் வ.முருகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உதயசூரியன் சனசமூக நிலையத்தை சார்ந்த அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.(4-3)

# இசை நிகழ்வு

(கொழும்புத்துறை)


கொழும்புத்துறை செபமாலை அன்னை ஆலய திருவிழாவை முன்னிட்டு மாபெரும் இசை நிகழ்வு நாளை திங்கட்கிழமை மாலை 7.30 மணிக்கு ஜேம்ஸ் அன்ரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடல் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (4-3)

# பிரஜாவுரிமை பெறுவதற்கான நடமாடும் சேவை ஏற்பாடு

அகதிகளாக இந்தியா சென்றவர்களுக்கு இந்தியாவில் குழந்தை பிறந்த நிலையில் மீள இலங்கை திரும்பி தமது சொந்த இடங்களில் குடியேறியுள்ளவர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் இலங்கை பிரஜாவுரிமையினை பெறுவதற்கான நடமாடும் சேவையினை இலங்கை சட்ட உதவிகள் ஆணைக்குழு எதிர்வரும் 15 ஆம் திகதி வவுனியாவில் செயற்படுத்தவுள்ளது.

எனவே பிரஜாவுரிமையினை பெறாதவர்கள் தமது ஆவணங்களை வவுனியா நீதிமன்ற கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடமாடும்சேவை இடம்பெறும் தினத்திற்கு முன்னராக ஒப்படைத்து தமது ஆவணங்களை சரிபார்த்துக் கொள்வதுடன் தமது தேவைகளை நடமாடும் சேவையின் போது நிறைவு செய்து கொள்வதனைஇலகுபடுத்தி கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளனர்.(4-2)



கலாநிதி தமிழ்மணி அகளங்கனின் வேரும் விழுதும் நூல் அறிமுக விழா அண்மையில் யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் ஜி.சித்தாந்தனின் தனியார் செயற்றிட்டத்திற்காக நூலாசிரியருக்கு மாலை அணிவிப்பதையும் அருகில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சரா. புவனேஸ்வரன், அதிபர் ஏ.அகிலதாஸ்,ஆசிரியை கலா சுந்தரேசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# அழிவைத் தடுக்கும் பரிசோதனை நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழா

(கொழும்பு)

பாரிய அழிவைத் தடுக்கும் தேசிய பரிசோதனை நிலையத்திற்கான அடிக்கல் நேற்று முன்தினம் களனியில் நாட்டி வைக்கப்பட்டது.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ அங்கு உரையாற்றுகையில்,

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதில் இந்த நிலையம் முக்கிய பங்கை வகிக்கும் என்று கூறினார்.


அதேவேளை உள்ளூர் உற்பத்தியின் தரததை அதிகரிப்பதோடு ஏற்றுமதியும் அபிவிருத்தியும் செய்யப்படும்.

அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

கட்டடங்கள் தொடர்பாகவும் தொழில்நுட்ப உபகரணங்கள் தொடர்பாகவும் இந்த நிலையம் தர நிர்ணய அறிக்கைகளை வழங்குமென்று கூறினார். (4-12)

# பொதுச் சேவையாளர்களுக்கு ஊதியம் அதிகரிக்கப்படும்!

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



அடுத்தாண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் பொது சேவையாளர்களுக்கு ஊதிய அதிகரிப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சரவை பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் ஒரு சில அமைப்புகள் அமைதியின்மையை ஏற்படுத்துவதாகவும் இதனால் சட்டத்தினை பாதுகாக்க வேண்டிய அனைத்து பொலிஸ் அதிகாரிகளையும் பாதுகாப்பு படையினரையும் விழிப்பாக நடக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவ்வாறான தீயசக்திகளே நாட்டில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணம் என தெரிவித்த அவர் அவ்வாறான தீய சக்திகளுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளதாகவும் கூறினார்.

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்த ஒரு பிரதேசத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்த தேவையில்லை. இரண்டல்லது மூன்று பேர் கும்பல் சேர்ந்து தந்திரோயாப நடவடிக்கைகளை மேற்கொண்டால் போதும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு தீய சக்திகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் ஒரு சில தராதரமற்ற இணையத்தளங்கள் தம்மை பல பெயர்களை கொண்டு சிறந்த செய்தி இணையத்தளங்களாக விளம்பரப்படுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அவற்றுள் சில ஜனாதிபதிக்கு எதிராக செயற்படுவதோடு மட்டுமல்லாது தீவிரவாத அமைப்புக்கும் துணைபோவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவ்வாறான ஒரு சில இணையத்தளங்கள் அவர்களை உண்மையின் உரிமையாளர்கள் என புகழ்பாடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# புலிகளினால் நாடு எதிர்நோக்கிய இன்னல்கள் பற்றி யாரும் கருதவில்லை

## போரின் கடைசி 14 நாட்கள் பற்றியே கதைக்கின்றனர்

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நடத்திய போரில் கடைசி 14 நாட்களை பற்றி மட்டுமே பேசுகின்றனர் என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுமார் 11 ஆயிரம் நாட்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் அழுத்தங்களினால் நாடு இன்னல்களை எதிர்நோக்கியது. இதுபற்றி எவரும் கவனம் செலுத்தவில்லை.

எனினும் இறுதி 14 நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி மட்டும் கேள்வி எழுப்புவது வருத்தமளிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த 11 ஆயிரம் நாட்களில் அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பல தரப்பினரையும் புலிகள் படு கொலை செய்தனர்.பாரிய கொடூரங்களை இழைத்த புலிகளின் நடவடிக்கைகள் குறித்து எவரும் கேள்வி எழுப்புவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.ஜனாதிபதிக்கு எதிராக சில ஊடகங்கள் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன.

பெரும்பான்மையான ஊடகங்கள் சிறந்த முறையில் கடமையாற்றி வருகின்ற போதிலும் ஒரு சில ஊடகவியலாளர்கள் இவ்வாறன குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (4-2)

# ஊழலுக்கு எதிராக மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது

## பிரதீபா பட்டேல் தெரிவிப்பு



லோக்பால் மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம் என ஜனாதிபதி பிரதீபா பட்டேல் வெளிநாட்டு பயணத்தை முடித்து விட்டு நாடு திரும்பினார்.

கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி முதல் ஒக்டோபர் 4 ஆம் திகதி வரை ஒருவர் அரசு முறை சுற்றுப்பயணமாக சுவிற்சர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு பிரதீபா சென்றார். அவரது பயணத்தின் போது சுவிற்சர்லாந்து நாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கான சட்டத்திருத்தத்தில் இரு நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டேலும் சுவிற்சர்லாந்து ஜனாதிபதி மெக்லைன் கால்மிரேவும் கையெழுத்திட்டனர்.

ஐரோப்பிய கண்டத்தில் உள்ள அணு ஆராய்ச்சி அமைப்பில் இந்தியா உறுப்பினர் ஆவதற்கான ஒத்துழைப்பையும் ஐ.நா.வின் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பு நாடு அந்தஸ்து பெறுவதற்கான ஆதரவையும் தர சுவிற்சர்லாந்து உறுதி அளித்துள்ளது. ஐ.நா சபையில் மறுசீரமைப்பு செய்வதற்கும் சுவிற்சர்லாந்து ஆதரவு தெரிவித்துள்ளது. பின்னர் ஆஸ்திரியா சென்ற ஜனாதிபதி அங்கு ஆஸ்திரிய ஜனாதிபதியைச்சந்தித்து பேசினார். அப்போது பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளை தீர்க்க இந்தியா எடுத்து வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் சீனாவுடன் உறவை மேம்படுத்த எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி விவரித்தார்.

வியன்னாவில் நடந்த இந்திய ஆஸ்திரியா தொழில் ஜனாதிபதிகள் கூட்டு கூட்டத்தில் உரையாற்றினார். இந்த கூட்டத்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு டில்லி திரும்பியபோது விமானத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது, லோக்பால் மசோதாவை நிறைவேற்றுவதில் மத்திய அரசு தீவிரமாக உள்ளது. ஊழலுக்கு எதிராக மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. லோக்பால் மசோதா நாடாளுமன்ற பரிசீலணையில் உள்ளது. இதை நிறைவேற்றி நடைமுறைக்கு கொண்டு வருவதில் மத்திய அரசு தீவிரமாக செயற் பட்டு வருகிறது. இதில் சந்தேகம் ஏதும் வேண்டாம். மிகப்பெரிய நாடான இந்தியாவில் தகவல் அறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமான விடயமாகும் என கூறினார்.

மேலும் அவர் சுவிற்சர்லாந்து நாட்டுடனான இரட்டை வரி விதிப்பு தொடர்பாக இந்தியா மிகவும் ஆர்வமாக இருந்தது. இது தொடர்பாக சுவிற்சர்லாந்து நாட்டுத்தலைவர்களின் கவனத்துக்கு எடுத்து சென்றேன். ஊழலை கட்டுப்படுத்தவும் ஊழலுக்கு எதிரான போராட்டத்திலும் மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் சர்வதேச ஊழலுக்கு எதிரான அமைப்பில் உறுப்பினராக இந்தியா பரிசீலணை செய்து வருகிறது என்று கூறினார். (4-2)

# சீனாவில் விபத்து; 35 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் குறைந்தபட்சம் 35 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவில் வடபிராந்தியத்திலுள்ள தியான்ஜின் நகரில் நேற்று முன்தினம் மாலை பேருந்து ஒன்றும் கார் ஒன்றும் மோதிக் கொண்டதால் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பேருந்தில் 55 பயணிகள் பயணம் செய்தனர். அவர்களில் பலர் பெரும்பாலானோர் மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் நேற்று முன்தினம் வரையான ஒருவார காலத்தில் குறைந்தபட்சம் 56 பேர் பலியாகியுள்ளனர். கடந்த வருடத்தில் சீனாவில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 65 ஆயிரம் பேர் பலியானதாகவும் 2 இலட்சத்து 54 ஆயிரம் பேர் காயமடைந்ததாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (4-2)

# லொறி கவிழ்ந்ததில் பதினெட்டு பேர் மரணம்

(கோராபுட்)

ஒரிசா மாநிலம் கோராபுட் மாவட்டத்தில் தசரா பண்டிகை கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவர்கள் பயணித்த லொறி தலை குப்புறக் கவிழ்ந்ததில் ஏழு பெண்கள், எட்டு குழந்தைகள் உட்பட 18 பேர் பலியாகினர்.

ஒரிசா மாநிலம் கோராபுட் மாவட்டம் பெதாபடார், மங்களகுடா, பங்ககுடா மற்றும் செம்பிடோடகுடா பகுதியைச் சேர்ந்தவர்கள் தசரா பண்டிகையை முன்னிட்டு கிராமிய கலை நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக தங்கள் குடும்பத்தினருடன் தசமந்தபூருக்கு லொறியில் சென்றனர். கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து விட்டு நேற்று முன்தினம் காலை சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். வேகமாகச் சென்ற லொறி ஒரு வளைவில் திரும்பிய போது எதிர்பாராதவிதமாக தலை குப்புறக் கவிழ்ந்தது.

இந்த விபத்தில் ஏழு பெண்கள், எட்டு குழந்தைகள் உள்ளிட்ட பலர் லொறியின் அடியில் சிக்கி நசுங்கினர். தகவல் அறிந்த அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து லொறியில் கீழ் சிக்கிக் கொண்டவர்களைக் காப்பாற்ற முயன்றனர். இருந்தும் 14 பேர் சம்பவ இடத்திலேயே பலியாயினர். படுகாயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். ஆபத்தான நிலையில் உள்ள மேலும் சிலர் கோராபுட் தலைமை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என கோராபுட் மாவட்ட எஸ்.பி அனுப் சாகு கூறினார். (4-2)

# மைக்கேல் ஜாக்சனின் மரணத்திற்கு தூக்க மாத்திரையே காரணம்

(நியூயோர்க்)

பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கல் ஜாக்சன் மரணத்திற்கு தான் அளித்த தூக்க மருந்தே காரணம் என அவரது டாக்டர் முரே நீதிமன்றில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஜாக்சனின் மரணம் குறித்து வழக்கு விசாரணை கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது. இதில் நேரில் ஆஜராகி வாக்குமூலம் அளித்த ஜாக்சனின் டாக்டர் முரே கூறியதாவது, தூக்கம் வராமல் தவிப்பதாகவும் அதற்கு மருந்து வேண்டும் எனவும் ஜாக்சன் தெரிவித்தார். அதனால் பால் போன்ற திரவத்தை அவருக்கு அளித்து விட்டு கழிவறைக்கு சென்று விட்டேன். திரும்பி வந்து பார்த்த போது ஜாக்சன் அசைவற்று கிடந்தார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஜாக்சன் இறப்பதற்கு சிறிது நேரம் முன்பு அவருக்கு பால் போன்ற திரவத்தை குடிக்க தந்ததாக அவரது பணியாளர் ஏற்கனவே வாக்குமூலம் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (4-2)

# ஒசாமாவை காட்டிக் கொடுத்த வைத்தியருக்கு தூக்குத் தண்டனை வழங்குமா பாகிஸ்தான்?

பாகிஸ்தானில் ஒசாமா அமெரிக்கப் படைகளால் சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்னர் அவர் அபோதாபாத்தில் வசிப்பதனை உறுதி செய்யும் பொருட்டு அவ்விடத்தில் போலி மருத்துவ முகாமொன்று நடத்தப்பட்டது.

இந்த முகாமினை நடத்தி அமெரிக்க உளவுப் பிரிவினருக்கு தகவல் வழங்கிய வைத்தியருக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சகில் அப்ரி என்ற குறித்த வைத்தியர் அந்நாட்டு உளவுப் பிரிவினரால் ஒசாமா சுட்டு கொல்லப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டார்.

அவர் தற்போது கடும் சித்திரவதைக்குள்ளாகி வருவதாகவும் அவருக்கென வாதாட வழக்கறிஞர் ஒருவரைக்கூட நியமிக்க அந்நாட்டு உளவுப் பிரிவினர் அனுமதிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மீதான குற்றங்கள் உறுதிசெய்யப்பட்டால் தூக்குத்தண்டனை வழங்கப்படலாம் என அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் அவரை விடுதலை செய்யும்படியும் அவரை அமெரிக்காவில் குடியமர்த்த தாம் தயாராகவுள்ளதாகவும் அமெரிக்க அரசாங்கம் அறிவித்திருந்தது.

எனினும் பாகிஸ்தான் இணங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே பாகிஸ்தானில் வைத்து ஒசாமா பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் போது சேதமடைந்த அமெரிக்க வானூர்தியை பரிசோதிக்க சீன பொறியியலாளருக்கு பாகிஸ்தான் அனுமதியளித்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

மேலும் இவ்விரு நாடுகளுக்கிடையேயான உறவு சுமுகமான நிலையில் இல்லாத போது இச்சர்ச்சை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)

# ஒசாமா பின்லேடன் குடும்பத்தினர் மீதான பயணத்தடைகள் நீக்கம்

அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனின் குடும்பத்தினருக்கு விதிக்கப்பட்டிருந்த பயணக்கட்டுப்பாடுகள் விலக்கிக் கொள்ளப்படுவதாக விசாரணைக் கமிஷன் தெரிவித்துள்ளது.

அல்கொய்தா பயங்கரவாத இயக்கத்தின் தலைவர் பின்லேடன் பாகிஸ்தானில் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த போது கடந்த மே 2 ஆம் திகதி அமெரிக்கப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜாவீது இக்பால் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. இதையடுத்து பின்லேடனின் மனைவிகள் மற்றும் 10 குழந்தைகள் பாகிஸ்தானை விட்டு வெளியேற அது தடை விதித்திருந்தது.

இதையடுத்து பின்லேடனின் மனைவிகள், குழந்தைகளிடம் கமிஷன் விசாரணை நடத்தி அவர்களது சாட்சியங்களை பதிவு செய்துள்ளது. அவர்களின் ஒத்துழைப்பு விசாரணைக் கமிஷனுக்கு இனி தேவையில்லையென தெரிகிறது. இதையடுத்து பின்லேடனின் குடும்பத்தினருடன் விசாரணை நிறைவடைந்து விட்டதால் அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள் விலக்கிக் கொள்ளப்படுவதாக நேற்று முன்தினம் விசாரணைக் கமிஷன் தலைவர் நீதிபதி ஜாவீது இக்பால் தெரிவித்தார்.

பின்லேடன் கொல்லப்பட்டதிலிருந்து அவரது குடும்பத்தினர் பாகிஸ்தான் இராணுவத்தின் பாதுகாப்பில் உள்ளனர். பின்லேடன் கொலை செய்யப்பட்டதை நேரில் பார்த்த சாட்சிகள் அவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இவர்களைத் தங்களிடம் ஒப்படைக்க வேண் டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது.

இதனிடையே பாகிஸ்தான் இராணுவ உயரதிகாரிகள் ஐஎஸ்ஐ அதிகாரிகளிடம் ஜாவீது இக்பால் தலைமையிலான கமிஷன் விசாரணை நடத்தியுள்ளது.

பாகிஸ்தான் 5 ஆண்டுகளுக்கு மேலாக பின்லேடன் எவ்வாறு இரகசியமாக அபோதாபாத்தில் பதுங்கியிருந்தார்? அந்த இடத்தை அமெரிக்கப் படையினர் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி பின்லேடனை சுட்டுக் கொன்றதற்கான பின்னணி குறித்து விசாரணை நடத்த அறிக்கை தாக்கல் செய்ய ஜாவீது இக்பால் கமிஷனுக்கு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டது. (4-2)



அமெரிக்கா, வோஷிங்டனில் அந்நாட்டு செயலர் ஹலாரி கிளின்டனை (இடது) துனிசிய பிரதமர் பெஜி கய்ட் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# இன, மத ரீதியிலான பிளவுகளை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்



## ஜனாதிபதி தெரிவிப்பு

நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்த முயற்சிக்கப்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். இன மற்றும் மத ரீதியான பிளவினை ஏற்படுத்துவதற்கு முனைப்புக் காட்டப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்று தசாப்தகால யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி புலனாய்வுத் தகவல்களை பகிர்ந்து கொண்டதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார். இந்த சதித் திட்டம் தொடர்பில் அமைச்சர்கள் அறிந்திருக்க வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். குழப்பத்தை விளைவிக்கும் நோக்கில் அடிப்படையற்ற போலியான வதந்திகளை சிலர் பரப்பி வருவதாகத் தெரிவித் துள்ளார்.

சில இணையத்தளங்கள் தகவல்களை உறுதிப்படுத்தாது வதந்தியான செய்திகளை பிரசுரித்து வருவதாக ஜனாதிபதி குற்றம் சுமத்தியுள்ளதாக கெஹலிய தெரிவித்துள்ளார். (4-2)

# லண்டனில் மோசடி செய்த பெண்ணிற்கு சிறைத்தண்டனை

(கொழும்பு)

லண்டனில் மூன்று வருடங்களின் முன் தனது குடியேற்ற பரீட்சையினை எழுதுவதற்கு சட்டவிரோதமாக வேறொரு ஆணை அனுப்பி வைத்த இலங்கைப் பெண் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோசடிக்கு துணை போன ஆணுக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ரெஜினோல்ட் அந்தோனி என்ற குறித்த ஆண் இவ்வாறு பரீட்சைக்கு தோற்றுவதற்கு பயன்படுத்திய 40 போலி சாரதி அனுமதிப் பத்திரத்தையும் அதிகாரிகளிடம் கையளித்துள்ளார். இதேவேளை இவ்வாறு குறித்த நபரை சட்டவிரோதமாக பரீட்சை எழுதி அனுப்பி வைத்து பெண் கிருஷ்ண தேவி தம்பிராஜா என இனங் காணப்பட்டுள்ளார்.

குடிவரவு திணைக்கள அதிகாரிகள் குறித்த பெண்ணின் வீட்டை நேரில் சென்று அவருடன் ஆங்கிலத்தில் கதைக்க முற்பட்ட போது அவரது கணவர் அவருக்கு அதனை மொழி பெயர்த்துக் கூறியுள்ளார்.

இதனையடுத்த குறித்த பெண் பரீட்சை எழுதியிருக்க வாய்ப்பில்லை என சந்தேகித்த எல்லைப் பாதுகாப்பு முகவர் அமைப்பு தொடர்ந்து நடத்திய விசாரணைகள் மூலம் பரீட்சைக்கு சமர்ப்பித்த சாரதி அனுமதி அட்டை போலியானது என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரித்தானியாவில் தொடர்ந்து விடுமுறையை கழிக்க கோருபவர்களுக்கு மிகவும் அத்தியாவசியமானபரீட்சையிலேயே குறித்த பெண் இவ்வாறான மோசடியினை செய்துள்ளார்.

இவர் இவ்வாறு போலி சாரதிப் பத்திரத்தை பெற்று பரீட்சை எழுத அந்தோனிக்கு 500 ஸ்ரேலிங் ஸ்பவுண்களைக் கொடுத்துள்ளார். இதனையடுத்து இவருக்கு இரண்டு வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (4-2)

# மன்னாரின் பல பகுதிகளில் வெடிபொருட்கள் மீட்பு

(கொழும்பு)

விடத்தல் தீவு- பாலம்பட்டி- நாயாறு பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இந்த வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது 81 மில்லி மீற்றர் வர்க்க மோட்டார் குண்டுகள் 4, 61 மில்லி மீற்றர் மோட்டார் குண்டு ஒன்று, 33 குண்டுகள் என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (4-2)


# விசேட பாடசாலை சேவை

பாடசாலை மாணவர்கள் நலன்கருதி 04.10.2011 அன்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் விசேடமாக ஒன்று கூட்டப்பட்ட கலந்துரையாடல் தீர்மானத்தின் படி எமது சங்கப் பதிவில் உள்ள பேருந்துகள் 10.10.2011 திங்கள் தொடக்கம் இரண்டு பாடசாலை சேவைகளை ஆற்றவுள்ளது.

காலை 06.00 மணிக்கு தேராவில் சந்தியில் பணி ஆரம்பித்து தர்மபுரம் பரந்தன் ஊடாக கிளிநொச்சி மத்திய கல்லூரியை வந்தடையும். அதேபேருந்து கிளி- கரடிப்போக்கு சந்தியில் இருந்து மாலை 14.00 மணிக்கு பணி ஆரம்பித்து பரந்தன் ஊடாக தேராவிலை சென்றடையும். மற்றையது கிளி- திருமுறிகண்டியில் காலை 06.45 மணிக்கு ஆரம்பித்து பரந்தனை வந்தடையும். மீண்டும் மாலை 13.50 மணிக்கு பரந்தனில் ஆரம்பித்து திருமுறிகண்டியை சென்றடையும். பருவகால சீட்டு கட்டணமாக இருவழிக் கட்டணத்தில் மூன்றில் இரண்டு (உதாரணத்திற்கு 60 /- எனின் 40/-) அறவிடப்படும். பருவகாலசீட்டு பெறாத மாணவர்களுக்கு இருவழிக்கட்டணமும் அறவிடப்படும். முதலாம் ஆண்டுக்குட்புட்ட பாடசாலை மாணவர்களுக்கு போக்குவரத்து இலவசமாகும்.

தலைவர்,
கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து
உரிமையாளரின் (உத்தரவாதம்)
வரையறுக்கப்பட்ட நிறுவனம்.

தொலைபேசி இலக்கம்
021 3208181 (6338)



# சேவை நயப்பு பாராட்டுவிழா



(6350)

## திருமதி அருள்நங்கை சண்முகநாதன் அவர்கள்

*என்றுமே இனியமுகத்துடன் இனிது வாழி!*
*அன்றுமே இன்றுமே எங்கள் அன்னாய் வாழி!*
*பொன்றொன்றுமின்றியே பொற்புடன் வாழி!*
*நன்று தீது என்றுமே ஒன்றாய் வாழியவே!*

எல்லாமா யொன்றாகி எங்கு நின்று
இருள் கொடுக்கும் பரஞ்சுடராகும் அறிவெனக்கு
ஒல்லாதே ஒளிரும் வண்ணம் கொண்டே
ஓங்கார வடிவாகச் சுத்தி செய்தே
நல்லாரம் திகழ் மார்பு நளினபாதம்
நவிலுமிந்த அங்கங்கள் நேர்முன்னாகச்
சொல்பொருளாஞ் சுருதியாக மங்களோடும்
சொல்லித்தந்த அருள்நங்கை அன்னாய் வாழி!

முப்பொழுதும் வந்து பணி மாணவர்கள் வாழி!
முறையாக விழாச் செய்வார் முயற்சி வாழி!
தப்பவிடா தாண்டு தோறும் நாம் சேர்ந்தே
அருள்நங்கை அன்னாயை வாழ்த்துவோமே
ஒப்பரிய கோவுயர் கல்விகண்தந்து
உயர் அறிவுக் கோபுரமாக்கிய அன்னையே வாழி!
அப்பரமேஸ்வரர் முதலளித்த ஞானகுருவே
அருள்நங்கை சண்முகநாதன் வாழி வாழியவே!

**இவண்**
**சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜக் குருக்கள்,**
B.A.Dip.in Eud MA
**பிரதிபதிபர், யா/ அம்பன் அ.மி.த.க. பாடசாலை.**

ஒரு நல்ல அறிஞனின் பேச்சைக் கேட்பது ஒரு சிறந்த மனிதனுக்கு அரிய சொத்தாகும்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்ப்பாண இளைஞர்களுக்கு என்ன நடந்துவிட்டது? தமிழகப் பேராசிரியர் கேட்ட கேள்வி

வட புலத்தில் இப்போது நடைபெறும் கருத்தரங்குகள், சுவட்டங்கள், நினைவுப் பேருரைகள் என்பன அனைத்தும் வெறும் சம்பிரதாயமாக இடம்பெறுகின்றனவே தவிர, அதில் எவரும் ஆர்வத்தோடு – தேடலோடு கலந்து கொள்வதில்லை என்பதே உண்மை.

நினைவுப் பேருரைகள், அறிஞர்களின் கருத்துரைகள் நடைபெறும்போது அதில் மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்று அங்கு முன்வைக்கப்படும் அறிவியல் கருத்துக்களை உள்வாங்கும் போதே அறிவின் பிரவாகம் ஏற்படும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக அறிஞர்களின் கருத்துரைகள் இடம்பெறும்போது, எங்கள் பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தர வகுப்பு மாணவர்கள், இளைஞர்கள் பங்கேற்பதில்லை என்ற செய்தி வேதனைக்குரியது.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த தமிழகப் பேராசிரியர் வி.அரசு அவர்கள், யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் கருத்துரை ஒன்றை வழங்கியிருந்தார்.

அவரின் கருத்துரையைக் கேட்பதில் சிறு தொகையினரே கலந்து கொண்டிருந்தனர். கலந்து கொண்ட சிறுதொகையினரில் பெரும்பாலானவர்கள் ஐம்பது வயது கடந்தவர்கள் என்பது வேறு செய்தி.

இந்த நிலைமையைப் பார்த்த பேராசிரியர் அரசு அவர்கள், யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவரைப் பார்த்து, யாழ்ப்பாண இளைஞர்களுக்கு என்ன நடந்துவிட்டது என்று கேட்டதாகத் தகவல். எப்படி இருக்கிறது நிலைமை?

தமிழகத்தின் மிகப் பிரபல்யமான பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து கருத்துரை வழங்கும்போது அதனை எங்கள் இளம் சமூகம் கேட்பதற்கு தயார் இல்லை எனில், எங்கோ ஒரு பெரும் இடைவெளி ஏற்பட்டு அது மிக அதீதமாக உடைப்பெடுத்துக் கொண்டிருக்கின்றது என்ற உண்மை உணர்தற்குரியது.

இங்குதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன் ஒரு பெரும் பணி முன்னிற்கிறது.

அதாவது, எங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் அறிவைத் தேடிக்கொள்ள வேண்டிய காலத்தில் வேறு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களை திசைதிருப்பி அறிவியலின் சூழமைவுக்குள் உட்படுத்துவதே அந்தப் பணியாகும்.

அறிஞர்களின் கருத்தரங்கு நடைபெறும் போது பல்கலைக்கழக மாணவர்கள் வெளியில் குந்தியிருப்பார்களாயின் அங்குதான் மிகப்பெரும் நோய் இருக்கிறது என்பதை நாம் உணரத் தவறும் போது கருத்தரங்குகளை கேட்கும் சுவட்டத்தில் இளைஞர்களைக் காண்பது முடியாத காரியமே.

## இலங்கைக்குள் நுழைவதில் புதிய நடைமுறை பயண முகவர்கள் அதிருப்தி வெளியீடு

இலங்கைக்குள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நுழைபவர்களிடம் 50 டொலர்களை கட்டணமாக அறவிடுவதென்கின்ற அரசின் தீர்மானத்தால் இதனுடன் தொடர்புபட்டவர்கள் பலரும் சவாலை எதிர்நோக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய இலத்திரனியல் பயண அங்கீகாரத்துவமானது (Electronic Travel Authorization-ETA) இலவச நுழைவிசைவு முறைமைக்குப் பதிலாக அறிமுகமாவதுடன் இது இணையத்தினூடாகவே பெறப்பட வேண்டும் எனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே விமானப் பயணிகளுக்கான தீர்வையை வழங்குகின்ற பிரிட்டன் பயணிகள் இவ்வாறு 50 டொலர்களை செலுத்துவதானது அவர்களை மிகவும் பாதிக்கும் என இதனுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் மற்றும் முகவர்கள் நம்புகின்ற அதேவேளையில் சிறிலங்கன் சந்தைப்படுத்தல் முகாமையாளர் நபீல் சரீப் இதனை ஆதரித்துள்ளார்.

நாங்கள் இது தொடர்பாக கவனத்தில் எடுத்துள்ளோம். ஆனால் இத்திட்டமானது எல்லாச் சந்தைகளுக்கும் பொது வானதாகும். பிரிட்டன் போன்று எல்லாச் சந்தைகளின் நிலைப்பாடுகளும் ஒரே விதமாக அமைந்திருக்காது.

இந்தியா அல்லது சீனாவுக்கு செலுத்துகின்ற கட்டணங்களை விட இது குறைவானதாகும். பிரிட்டனின் பக்கம் இருந்து பார்க்கும் போது இது கடினமானதாகவே அமைந்திருக்கும். ஆனால் நாங்கள் நாடுகளுக்கிடையில் பாரபட்சத்தை காண்பிக்க விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## மாதாந்த சஞ்சிகை வெளியீடும் குறும்புக்காரன் இசைத்தட்டு வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவின் இளம் தலைமுறையினரின் முதன் முதலாக வெளிவரும் கலை இலக்கிய சஞ்சிகை சப்தம் மாதாந்த இதழ் வெளியீடும் நெடுந்தீவு யோகேஸ்வரனின் குறும்புக்காரன் இசைத்தட்டு வெளியீடும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள ரி.சீ.ரி.சுவர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலண்டின், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தர்சனன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கவிஞர் நெடுந்தீவு மகேஷ், கரிதாஸ் கியூடெக் இயக்குனர் ஜோ.சே.பேணாட் றெக்னோ, யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் மற்றும் தலைவர் சி.விசாகரூபன், கவிஞர் எம்.பி. அருளானந்தம், கவிஞர் நெடுந்தீவு–லக்ஸ்மன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் புலவர் எ.டபிள்யூ அரியநாயகம், நெடுந்தீவு கோட்டக்கல்விப்பணிப்பாளர் க.அரசரட்ணம், தீவகவலைய ஆசிரிய ஆலோசகர் தி.செல்வகுமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரபல அகாவாளி சஞ்சிகை ஆசிரியர் ச.இந்திரகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு சப்தம் சஞ்சிகையின் முதற் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் சில் வேஸ்திரி அலன்டினும், குறும்புக்காரன் இசைத்தட்டு முதல் பிரதியை யாழ்.பல் கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி தர்ஷனனும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இதில் ஆசியுரையினை கரிதாஸ் கியுடெக் இயக்குநர் அருட்பணி ஜே.சே. பேனாட் றென்னோ சப்தம் சஞ்சிகை இதழ் ஆய்வுரையினை கவிஞர் நெடுந்தீவு மகேஷ், குறும்புக்காரன் நயவுரையினை கலாநிதி தர்ஷனன், வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைகழக சப்தம் ஆசிரியர் எம்.கலைவாணி நிகழ்த்துவார். (4-12)

## ஆப்கானில் இலங்கை படைகள் அமெரிக்கா முயற்சித்தது

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் இலங்கை இராணுவத்தினரை ஈடுபடுத்துவது குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும், இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கிற்கும் இடையில் பேசப்பட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

2009-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் திகதி இந்தப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையில் இலங்கைப் படை வீரர்களை இணைத்துக் கொள்வது குறித்து பேசப்பட்டுள்ளது.

தற்போதைக்கு இவ்வாறு படையினரை நிலைநிறுத்துவது பொருத்தமாக அமையாது என பாதுகாப்புச் செயலாளர் சுட்டிக் காட்டியதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் நல்லிணக்கம், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், முன்னாள் போராளிகள், புலிகளுக்கும் எரித்திரியாவிற்கும் இடையிலான தொடர்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இப்பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டுள்ளதாக விக்கி லீக்ஸ் மேலும் தெரிவித்துள்ளது. (பா)

## அருத்தவர்களுக்கு ஆறுதல் அளித்த ஆண்டவரின் விருந்தின் மகிழ்ச்சியைப் பெறுவோம் (மத் 22:1-14)

விருந்துக் கொண்டாட்டங்கள் பற்றியே இன்றைய வாசகங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. முதல் வாசகத்தில் ஏசாயா இறைவாக்கினர் மக்களைப் பார்த்து இறைவன் சந்திக்கின்ற மலைக்குச் செல்லுங்கள். அங்குள சுவைமிகு விருந்தை இறைவன் தருவார். அழுகையையும், சோகங்களையும் அழித்துவிடுவார் என அழைக்கின்றார்.

நற்செய்தியில் இயேசு சமூக ஒன்றிப்பே உண்மையான, நிறைவான விருந்து கொண்டாட்டம் என அழைப்பு விடுக்கின்றார். ஏன் எம்மிடையே சமூக உணர்வும் சந்தோச பகிர்வும் இன்று அனுப்பி விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன் வாருங்கள் என்று அழைக்கிறார். அவர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை.

கடவுளின் அன்பில் நாம் திளைத்திருக்கும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி நம் இதயத்திற்கும் நிறைவை அளிக்கும் கொடை வள்ளலாகச் செயற்படுகின்ற கடவுளின் அழைப்பை சிலர் ஏற்பதில்லை. முதலில் அழைக்கப்பட்டவர்கள் இஸ்ரயேலர். அவர்களில் பலர் இயேசுவை மெசியாவாக ஏற்க தயங்கினார். ஆனால் பிறஇனத்தார் பலர் கடவுளின் அழைப்பை ஏற்று, இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர். அவரில் மகிழ்ச்சி அடைந்தனர்.

வெறும் உணவுக்காக மட்டும் வராமல் சகோதரத்துவத்தை தேடிவருதலே பொருத்தமான ஆடைக்கு ஒப்பிட்டுக் குறிப்பிடுகிறார்.



நம் நற்கருணை கொண்டாட்டங்கள். நம் இல்லத்து விருந்துகள் ஏன் இன்று சமூக உணர்வை கொடுப்பதில்லை. வாக்குவாதங்களும் சண்டைகளும் உருவாகும் தருணங்களாக எம் விருந்துகள் மாறிவிட்டன.

நல்விருந்தில் பங்குபெற அழைக்கும் சில பொறுப்புகள் உண்டு. பிறருக்கு உதவி செய்து ஆறுதல் அளித்து

### பரமபிதா காட்டிய பாதை

இருப்பதில்லை.

இயேசு இறையாட்சி விண்ணரசு பற்றி விளக்கிய பல உவமைகளுள் திருமணவிருந்து உவமை சிறப்பான ஒன்றாகும். மறைநூலிலும் விருந்து பற்றி பல இடங்களில் காணலாம். எசாயா 25:6 லூக் 5:29, 14:13, யோவா 2:2, 1 கொரிந் 11:20 கடவுள் மனிதருக்குத் தம் கொடைகளை வாரி வழங்குவது விருந்துக்கு ஒப்பிடப்பட்டது. எனவே, கடவுளின் ஆட்சியில் மக்கள் அனைவருக்கும் சுவையான விருந்து வழங்கப்படும் என்று இயேசு போதித்தார்.

இன்று நற்செய்தியில் இயேசு கூறும் உவமை நமக்கு வியப்பை தரும். அரச மகனுக்குத் திருமணம். அழைக் கப்பெற்றவர்கள் வர விரும்பவில்லை. மீண்டும் அவர் தன் பணியாளர்களை

இறை வன் தருகின்ற மகிழ்ச்சி, ஆறுதல் நிறைவு இவற்றை வேறுயாரோ, எதுவோ தரப்போவதில்லை.

நாம் திருப்பலி விருந்தில் பங்கு பெறாத காரணம் சொல்லுகின்றோம். இப்போது இயேசு சொன்ன உவமை நமக்குத்தான் என்பதை உணர்ந்து, இந்த உவமையில் வரும் மனிதர்களைப் பார்த்து வியக்கும் நாம், நம்மைப் பார்த்தே கொஞ்சம் வியப்போம். அந்த விருந்தின் மீது நாம் அதிக ஆர்வம் கொள்வோம். சாக்குபோக்குகளைக் களைந்து ஆர்வத்துடன் இறைவனின் அழைப்பை ஏற்றுக்கொள்வோம்.

அழைப்புக்கு ஏற்ப நடக்காதவர்களை உருவகமாகத் திருமண ஆடையின்றி வந்தவர் என குறிப்பிடுகின்றார்.

**ம. பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர, பத்திரிகையாளர்.**

அதில் ஒரு விருந்தின் மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளலே அது அன்பு கொடுக்கப்படாத பிறருக்கு இயேசுவைக் கொடுத்து நற்கருணை விருந்தை முழுமையாக்க வேண்டும். மகிழ்ச்சி நிறை நற்கருணை விருந்துக்கு நாம் ஒரே சமூகமாக அணிதிரள்---வோம்.

# வெள்ளாங்குளம் வீதியை புனரமைக்க நடவடிக்கை

(மல்லாவி)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் இந்திய நிறுவனத்தின் வேலைத்திட்ட ஒப்பந்தத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழுள்ள 38 கிலோமீற்றர் தூரம் கொண்ட மாங்குளத்தில் இருந்து வெள்ளாங்குளத்திற்கு செல்லும் வீதி (B 269)காபெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வேலைக்கான ஒப்பந்தம் கடந்த 3 ஆம் திகதி ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மிக நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாதிருந்த இவ்வீதியானது மக்களுடைய போக்குவரத்துப் பாவணைக்கு இடையூறாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. பலமுறை இவ் வீதிக்குறைபாடு பற்றி மக்கள் தமது ஆதங்கத்தை பலமுறை வெளிப்படுத்தியிருந்தனர்.

இதனால் தற்போது இவ் வேலைத்திட்டம் நடைபெறவுள்ளது. இவ் வேலைத்திட்டமானது இருவருடங்களில் பூர்த்தியடையத்தக்கதாக செயற்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-3-15)


## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளில் உள்ள வெற்றிடம் நிரப்பப்படவுள்ளதால் பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அலுவலக செய்தியாளர்கள் (இருபாலாரும்)
- கணனி ரைப்பிங் தமிழ் (ஆண்கள்) VACANCIES
- பக்கம் மற்றும் விளம்பர வடிவமைப்பாளர்கள் (இருபாலாரும்)
- உதவிக் கணக்காளர் (இருபாலாரும்)
- Offset இயந்திரம் இயக்குநர் மற்றும் பயிலுநர் (ஆண்கள்)
- விநியோக முகாமையாளர் (இரவுக் கடமை, ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்)

பொருத்தமான தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தொலைபேசி இலக்கம் உட்பட தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை

மனிதவள முகாமையாளர்
வலம்புரி
இல.3 , 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

JOBS

எனும் முகவரிக்கு நேரில் அல்லது தபாலில் 10.10.2011 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: நேர்முகத் தேர்வு 11.10.2011 இல் நடைபெறும்.
(அது பற்றி தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்)

பொது முகாமையாளர்,
வலம்புரி


# சட்டங்கள் குறித்து பொலிஸாரிடம் போதிய அறிவாற்றல் இல்லை

## குற்றவாளிகள் தப்பிக்க இதுவே காரணம்



(கொழும்பு)

பெரும்பாலன சட்டங்கள் தொடர்பாக பொலிஸாரிடம் போதுமான எவு தெளிவின்மையால் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படும் குற்றவாளிகளும் தப்பி விடுகின்றனர் என கடந்த 6 ஆம் திகதி சபையில் உரையாற்றிய பேராசிரிர் ரஜீவ் விஜேயசிங்க எம். பி.தெரிவித்தார்.

தமிழ் இளைஞர், யுதிகள் இன்று பெரும்பாலானோர் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற தேசிய பொலிஸ் பயிற்சி அகடமி தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்க எம்.பி. இதனை தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுக்கு சேவை செய்வதை புறந்தள்ளிவிட்டு அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக அரசாங்கம் சார்பாக செயற்படுவதான குற்றச்சாட்டுக்களே அதிகம் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால் நாட்டின் ஒழுங்கு, மக்கள் பாதுகாப்பு, குற்றங்களை ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மனித உரிமைகளை மீறும் பொலிஸாருக்கு அரசாங்கம் பதவியுயர்வுகளை வழங்கவில்லை.

தமிழ்மொழி பொலிஸார் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதில்லையென்ற குற்றச்சாட்டுக்களை கூட்டமைப்பு எம்.பி. முன்வைத்தார்.

ஆனால், இதனை ஏற்க முடியாது. தமிழ்மொழி பொலிஸார் அதிகமானோர் இன்று சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அன்று விடுதலைப்புலி பயங்கரவாதிகள் காலத்தில் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைய விரும்பவில்லை. காரணம் புலிகள் கொலை செய்வார்கள் என்று அஞ்சியே.

ஆனால் இன்று அதிகளவில் தமிழ் இளைஞர், யுவதிகளிடமிருந்து பொலிஸ் சேவையில் இணைவதற்கு விண்ணப்பங்கள் குவிகின்றன.

அத்தோடு இன்று பெரும்பாலான தமிழர்கள் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் பயிற்சி அகடமியை உருவாக்குவது காலத்தின் தேவையாகும். தொழில்சார் திறமைகளை அத்தோடு சட்டங்கள் தொடர்பில் அறிவையும் வழங்க முடியும்.

பொலிஸாருக்கு சட்டங்கள் தொடர்பில் அதிகளவு அறிவில்லாததால் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்படும் குற்றவாளிகளும் தப்பி விடுகின்றனர் என்றும் பேராசிரியர் தெரிவித்தார். (4-2)

# இலங்கையின் தேயிலை இறக்குமதி தடையை சிரியா நீக்கியுள்ளது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வதற்கு விதித்திருந்த தடையை சிரியா நீக்கியுள்ளது. இத் தடையினால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடையும் என அஞ்சப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சிரியாவினால் தடை எதுவும் இல்லை.சிறு தேயிலை பொதிகளுக்கான தடையும் நீக்கப்பட்டுள்ளது என இலங்கை தேயிலை சபையின் ஊக்குவிப்புப்பணிப்பாளர் ஹசித டி அல்விஸ் தெரிவித்துள்ளார். (4-2)


## இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு ஸ்ரீ தனலட்சுமி யந்திரம்

### ஸ்ரீ தனலட்சுமி யந்திரத்தை அணிந்து கொள்ளும் மற்றும் பூஜை முறை

✷ ஏதாவது ஒரு சுப தினத்தை தேர்ந்தெடுத்து குளித்து பய பக்தியோடு பூஜை அறையில் அமர்ந்து அனைத்து பூஜை பொருட்களையும் ஒரு மஞ்சள் துணி விரித்த மனையில் வைக்கவும். நீங்களும் கிழக்கு திசையை பார்த்து அமரவும்.

✷ அனைத்து பூஜை பொருட்கள் மீதும் கங்கை நீர் தெளிக்கவும்.

✷ யந்திரத்தை தாமரை அல்லது பூஜைக்கு உகந்த சிவப்பு நிற புஷ்பம் இடவும்.

✷ நெய்யில் விளக்கேற்றி, ஊதுவர்த்தி ஏற்றிக் காட்டவும்.

✷ இனிப்பு மற்றும் பழ வகைகளை வைத்து நைவேத்தியம் செய்யவும்.

✷ யந்திரம், பென்டென்ட் மற்றும் இதர பூஜை பொருட்களுக்கு சிவப்பு நிற கயிற்றை வஸ்திரம் போல் பாவித்து பூஜிக்கவும்.

✷ இவற்றிற்கு குங்குமம் வைத்து பின்னர் அஸ்தை போட்டு வணங்கவும்.

✷ கவசத்தை வலது உள்ளங்கையில் வைத்த சிறிது நீர் வார்த்து கண்களை மூடி, உங்கள் பேரை உச்சரிக்கவும். பின்னர் கவசத்தை (பென்டென்ட்) அணியவும்.

✷ இதற்காக எந்த விதமான நல்ல சிவப்பு கயிற்றையும் அல்லது செயினையும் உபயோகிக்கலாம்.

✷ இப்பொழுது நீங்கள் உருவ சிலையின் முன்பு தலை வணங்கி கீழ்வரும் மந்திரத்தை உச்சரிக்கவும்:-

ஓம் ஹிரண்யவர்ணா ஹரிணீ ஸுவர்ண ரஜத் ஸ்த்ரநாம் ஷ
சந்த்ராம் ஹிரணமயீ ஸஷ்மீ ஜாதவேதோப் ஆ வஹ

✷ ஆமை உருவ சிலையான மேருயந்திரத்தை பணப்பெட்டியில் வைக்கவும்.

✷ இதனுடன் கொடுக்கப்பட்டு லக்ஷ்மி ப்ராப்த்தி யந்திரத்தை கடையின் பணப் பொட்டியிலோ அல்லது உங்கள் வியாபார ஸ்தாபனம் உள்ள இடத்தில் வைக்கவும்.

✷ மேலும் உருவ சிலையை மற்றும் பாதுக்கையை பூஜை அறையில் வைத்து நித்திய பூஜை செய்யவும்.

### முக்கியமான விடயம்

✷ அனைத்து பூஜை பொருட்களை அதாவது உங்களுக்காக பூஜிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டவையை மற்றவர் உபயோகிக்கக்கூடாது.

✷ கூடுதல் தேவைக்கு தொலைபேசி மூலம் எங்கள் நிறுவனத்தை அணுகி பெற்றுக் கொள்ளலாம்.



## இல்லங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களின் விருத்திக்கு!

ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம்
யந்திரம்
சிலை
ஐஸ்வரியம் பெருகும்
ஆமை
பகல் 2 மடங்கு இரவில் 4 மடங்காக செல்வத்தை பெருக்கும்
பாதுகை
ரகசியமாக செல்வம் பெருகும்

BUY 1 BOX GET 1 DHANLAXMI PENDANT FREE!

Product inside
1. Two Shri Dhan Laxmi Kavach (24ct.gold plated foil pendant)
2. Siddha Maa Laxmi Idol
3. Meru Shri Yantra (Gold Plated)
4. Maa Laxmi Charan Paduka (Gold Plated)
5. Shri Laxmi Yantra (Gold Plated)

கையிருப்பு உள்ளவரை மட்டுமே...
பதிவுக்கு இன்றே முந்துங்கள்!

flex அருள்

FREE! OCTOBER ISSUE

Sri Lanka Contact
No: 04, IBC ROAD, WELLAWATTE.

India Branch: Jain Plaza, #8, 1St Floor, 124/63, Pondy Bazar T.Nagar, Chennai-600 017.

மேலதிக விபரங்களை தென்னிந்திய தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவில் கண்டு களியுங்கள்!

JAYA TV CAPTAIN TV MEGA TV Z தமிழ்

0777 614 186 DELIVERY AVAILABLE

FLEX Graphic

# சம்பியன் வெல்வது யார்?

# மும்பை-பெங்களூர் இன்று மோதல்

(சென்னை)

சம்பியனஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதுகின்றன. நேற்று நடந்த அரையிறுதிப் போட்டியில் மும்பை அணி சோமர்சட் அணியை 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. வேகத்தில் மிரட்டிய மலிங்க 4 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

மூன்றாவது சம்பியன்ஸ் லீக் தொடரின் இரண்டாவது அரையிறுதிப் போட்டி நேற்று சென்னையில் நடந்தது. இதில் மும்பை இந்தியன்ஸ் இங்கிலாந்தின் சோமர்சட் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பைஅணித்தலைவர் ஹர்பஜன் சிங் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**பிளிஜார்ட் அபாரம்**

மும்பைஅணிக்கு பிளிஜார்ட், கன்வர் இணைந்து சுமாரான ஆரம்பம் தந்தனர். கிர்பையின் முதல் ஓவரில் பிளிஜார்ட் மூன்று பவுண்டரிகள் அடித்தார். ஆரம்பத்திலிருந்தே திணறிய கன்வர் (2) விரைவில் ஆட்டமிழந்தார்.

அவ்வப்பேது பவுண்டரிகளை விளாசிய அம்பதி ராயூடு (19) நிலைக்கவில்லை. மறுபுறம் தொடர்ந்து அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய பிளிஜார்ட் டிப்பிள் ஓவரில் தலா ஒரு சிக்சர், பவுண்டரி அடிக்க 6 ஓவரில் அணியின் ஓட்டஎண்ணிக்கை 50 ஐ கடந்தது. பிராங்கிளின் 6 ஓட்டங்களுடன் மெர்வியின் சுழலில் வீழ்ந்தார். அரைச்சதம் கடந்த பிளிஜார்ட் (54) கார்த்திக்கின் சுழலில் சிக்க ஓட்ட வேகம் மந்தமானது.

**போலார்ட் ஏமாற்றம்**

பின்வந்த போலார்ட் 2 சிக்சர் அடித்த திருப்தியுடன் 24 ஓட்டங்களுக்கு அரங்கு திரும்பினார். கடைசி நேரத்தில் சதீஷ் சூர்ய குமார் அதிரடியில் ஈடுபட்டனர். இந்த ஜோடி தோமஸ் வீசிய 19 ஆவது ஓவரில் ஒரு சிக்சர் 3 பவுண்டரிகள் உட்பட 20 ஓட்டங்கள் எடுத்தது. மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 160 ஓட்டங்கள் எடுத்தது.

**மலிங்கா ஷாக்**

சற்று கடினமான இலக்கை விரட்டிய சோமர்சட் அணிக்கு மும்பை பந்துவீச்சாளர் மலிங்க ஆரம்பத்திலேயே ஷாக் கொடுத்தார். இவரது முதல் ஓவரின் இரண்டாவது பந்தில் டிரிகோ டக் ஆட்டமிழந்தார். அடுத்து அடுத்து 2 பவுண்டரிகள் அடித்து அதிரடியாக ஆரம்பித்த மேர்வியை (10) நீடிக்கவிட வில்லை.

**கீஸ்வெற்றர் ஆறுதல்**

இதன் பின் கீஸ்வெற்றர், ஹில்டிரத் இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சாகர் ஓவரில் ஹில்டிரத்தும் சதீஷ் ஓவரில் கீஸ்வெற்றரும் பவுண்டரிகளாக விளாச சோமர்சட் அணி சரிவில் இருந்து மெல்ல மீண்டது.

மூன்றாவது விக்கெட்டுக்கு 63 பந்தில் 83 ஓட்டங்களை சேர்த்தநிலையில் ஹில்டிரத் (39) ஹர்பஜன்சிங் பந்தில் போல்டானார். கீஸ்வெற்றர் சர்வதேச இருபது -20 அரங்கில் 11 ஆவது அரைச்சதம் கடக்க வெற்றி மெல்ல சோமர்சட் அணியின் பக்கம் திரும்பியது.

**பிராங்கிளின் திருப்பம்**

அகமது வீசிய போட்டியின் 17 ஓவரில் கீஸ்வெற்றர், பட்லர் இணைந்து 16 ஓட்டங்கள் எடுக்க டென்ஷன் எகிறியது. இந்நிலையில் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த பட்லர் (19) கீஸ்வெற்றர் (62) இருவரும் பிராங்கிளின் ஓவரில் ஆட்டமிழக்க சோமர்சட் அணியின் வெற்றிக்ய் கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

**மும்பை வெற்றி**

மலிங்க வீசிய இந்த ஓவரின் முதல் பந்தில் ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது. அடுத்து இரு பந்துகளில் காம்டன் (5) கார்த்திக் (0) போல்டாகினர். கடைசி 3 பந்தில் 3ஓட்டங்கள் மட்டும் எடுத்தனர். சோமர்சட் அணி 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 150 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மும்பைப் இந்தியன்ஸ் அணி முதன் முறையாக சாம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. 4 விக்கெட் வீழ்த்திய மும்பை அணியின் மலிங்க ஆட்டநாயகன் விருதை வென்றார்.

**கோப்பை யாருக்கு?**

இன்று நடக்கும் இறுதிப் போட்டியில் விக்டோரியின் பெங்களூரு அணி, மும்பை இந்தியன்ஸ் அணியை சந்திக்கின்றது. இரு அணிகளும் முதன் முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியவை என்பதால் கோப்பை வெல்ல கடுமையான போட்டியை வெளிப்படுத்த காத்திருக்கின்றன.

## ஆசிரியர் தின விழா

(சுதுமலை)

சுதுமலை பிறிலியன்ற் அக்கடமியின் ஆசிரியர் தினவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு நிறுவன மண்டபத்தில் எஸ். கலைச்செல்வன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியர் எம்.எ.நிரோஜன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (பா-9)

## சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு ஐ.சி.சி. எச்சரிக்கை

(கொழும்பு)

காலி சர்வதேச கிரிக்கெட் மைதான ஆடுகளத்தின் மோசமான தரம் குறித்து சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) உத்தியோக பூர்வமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி காலியில் நடந்தது. இப்போட்டிக்கான ஆடுகளம் மிக உலர்ந்த நிலையில் இருந்தமை குறித்து இரு தரப்பு வீரர்களும் விமர்சித்திருந்தனர்.

குறிப்பாக போட்டியின் ஆரம்பத்தில் பந்தின் சுழற்சி அளவுக்கு அதிகமாக இருந்தமையும் பந்துகள் அசாதாரண வகையில் எகிறியமையும் தெளிவானது என ஐ.சி.சி. பொது முகாமையாளர் டேவ் ரிச்சட்ஸன் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆடுகளத்திற்கு தடைவிதிக்கப்படக் கூடிய நெருக்கடியும் எதிர்நோக்கப்பட்டது. எனினும் காலி ஆடுகளம் மோசமானதாக தரப்படுத்தப்பட்டமை இது முதல் தடவை என்பதையும் துடுப்பாட்டத்திற்கும் பந்துவீச்சிற்கும் சமநிலையை ஏற்படுத்தும் வகையில் ஆடுகளத்தை முன்னேற்றுவதற்கு ஆடுகளத்தின் பராமரிப்பாளர் முன்வந்துள்ளமையையும் கருத்திற்கொண்டு நாம் எச்சரிக்கையை விடுக்கிறோம் என ரிச்சட்ஸன் தெரிவித்துள்ளார்.

ஆடுகள ஆலோசகர் அன்டி எட்கின்ஸனை இம்மாத இறுதியில் காலி ஆடுகளத்தை பார்வையிட்டு தேவையான சிபார்சுகளை செய்யுமாறும் ஐ.சி.சி. பணித்துள்ளது.

இம் மைதானத்தில் அடுத்த சர்வதேச போட்டி நடைபெறுவதற்கு முன்னர் தேவையான திருத்தங்களை அமுல் படுத்துவது தொடர்பாக ஐ.சி.சிக்கு சிறிலங்கா கிரிக்கெட் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



வட்டக்கச்சிப் பங்கிற்குட்பட்ட முன்பள்ளிகளினது சிறுவர் தினமும் ஆசிரியர் தினமும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

வட்டக்கச்சிப் பங்குத் தந்தை அருட்திரு தே.யூட்தாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு பிறரன்புக்கன்னியர் சபை மாகாண ஆலோசகர் அருட்சகோதரி டொமினிக்கா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். பாடசாலை அதிபர் திரவியம், கிராம உத்தியோகஸ்தர் யோண் ஜெகநாதன், அருட்சகோதரிகள் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டனர். 220 க்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து சிறப்பித்தனர். பல கலை நிகழ்வுகளும் அரகேற்றப்பட்டன.

## ஆளும் கட்சிக்கு...

137 வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி ஆயிரத்து 85 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

**அநுராதபுர மாநகரசபை**

ஐ.ம.சு.மு. 14 ஆயிரத்து 849 வாக்குகளைப் பெற்று 10 ஆசனங்களையும் ஐ.தே.க. 5ஆயிரத்து 28 வாக்குகளைபெற்று 3 ஆசனங்களையும் பெற்றன.

**அம்பாந்தோட்டை பிரதேசசபை**

ஐ.ம.சு.மு. 11 ஆயிரத்து 836 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையும் ஐ.தே.க. 3ஆயிரத்து 788 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

**மாத்தறை மாநகரசபை**

ஐ.ம.சு.மு. 20 ஆயிரத்து 681 வாக்கு களைப் பெற்று 9 ஆசனங்களையும் ஐ.தே. க. 12 ஆயிரத்து 619 வாக்குகளை பெற்று 5 ஆசனங்களையும் ஜே.வி.பி ஆயிரத்து 449 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

**குருநாகல் மாநகரசபை**

ஐ.ம.சு.மு. 8 ஆயிரத்து 578 வாக்கு களைப் பெற்று 8 ஆசனங்களையும் ஐ.தே.க. 4ஆயிரத்து 838 வாக்குகளை பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன.

**கம்பஹா மாநகரசபை**

ஐ.ம.சு.மு. 22ஆயிரத்து 679 வாக்குகளைப் பெற்று 14 ஆசனங்களையும் ஐ.தே.க. 6 ஆயிரத்து 478 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் சுயேட்சைக் குழு-3 835 வாக்குகளைப்பெற்று ஒரு ஆசனத்தை யும் பெற்றுக் கொண்டன.

**மாத்தளை மாநகர சபை**

ஐ.ம.சு.மு. 11 ஆயிரத்து 407 வாக்குகளைப் பெற்று 9 ஆசனங்களையும் ஐ.தே.க 4ஆயிரத்து 751 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் சுயேட்சைக் குழு-5 552 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

**இரத்தினபுரி மாநகர சபை**

ஐ.ம.சு.மு. 15ஆயிரத்து 626 வாக்குகளைப் பெற்று 11 ஆசனங்களையும் ஐ.தே.க. 6 ஆயிரத்து 820 வாக்குகளைப்பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

**கண்டி பிரதேச சபை**

ஐ.ம.சு.மு. 14ஆயிரத்து 683 வாக்கு களைப் பெற்று 8 ஆசனங்களையும் ஐ.தே.க. 9 ஆயிரத்து 418 வாக்குகளையும்பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன.

**குண்டகசாலை பிரதேச சபை**

ஐ.ம.சு.மு. 34 ஆயிரத்து 488 வாக்ககளை பெற்று 14 ஆசனங்களையும் ஐ.தே.க. 16 ஆயிரத்து 934 வாக்குகளையும் பெற்று 6 ஆசனங்களையும் சுயேட்சைக்குழு 2 ஆயிரத்து 128 வாக்குகளையும் ஜே.வி.பி. ஆயிரத்து 561வாக்குகளையும் பெற்று தலா ஒரு ஆசனத்தையும் பெற்றன.

**அம்பாந்தோட்டை மாநகரசபை**

ஐ.ம.சு.மு. 6 ஆயிரத்து 183 வாக்குகளைப் பெற்று 8 ஆசனங்களையும் ஐ.தே.க. 4 ஆயிரத்து 742 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டன.

**சூரியவெலவ பிரதேச சபை**

ஐ.ம.சு.மு. 14 ஆயிரத்து 279 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும் ஐ.தே.க. 5 ஆயிரத்து 388 வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன. (பா)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவபாதம் சிவதர்சன் B.A(Hons)



யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
27வது பட்டமளிப்பு விழாவில்
கலைமாணிப் பட்டம் பெற்ற
எமது கல்வி நிறுவனத்தின்
புவியியல் பாட ஆசிரியர்
சிவபாதம் சிவதர்சன்
மேலும் பல பட்டங்களைப்
பெற வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
பிறிலியன்ற் அக்கடமி ஆசிரியர்கள்

(சி-4681)


## விசேட கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

தேசிய கல்வி நிறுவனத்தில் 2011/2013 கல்வியாண்டில் கல்விமாணி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோருக்கான விசேட கலந்துரையாடல் நாளை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் தேசிய கல்விநிறுவனத்தினால் நடத்தப்படவுள்ளது. இக் கலந்துரையாடலில் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் கலந்து கொள்வதால் மேற்படி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட அனை வரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கற்கை நெறியின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (பா- 9)

## விளையாட்டுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் வட மாகாண ஊழியர்கள் மற்றும் விளையாட்டுச் சங்கம் நடத்தும் வருடாந்த விளையாட்டுப் போட்டி வைபவம் நாளை மறுதினம் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டியை காலை 9.00 மணிக்கு மின் சாரசபையின் வட பிராந்திய முகாமையாளர் டி.கே.பி. யூ குணதிலக பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார். (பா-9)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில்
இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134

## ஆளும் கட்சி முக்கியஸ்தர்கள்...

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையாளருமான துமிந்த சில்வாவின் குழுவினருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் குழுவினருக்கும் இடையில் நேற்று மாலை பரஸ்பர துப்பாக்கிபிரயோகம் இடம்பெற்றது.

கொழும்பின் புறநகர் பகுதியான முல்லேரியா, சிறிமாவோ பண்டாரநாயக்க நூலகத்திற்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கொடிகாவத்த – முல்லேரியா பிரதேச சபைக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிடும் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் ஆதரவாளரான பிசன்ன சோலங்கராச்சியின் வீட்டிற்கு துமிந்த சில்வா தனது குழுவினருடன் சென்று அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இதனை அறிந்துகொண்ட பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உடனடியாக தனது ஆதரவாளர் வீட்டிற்குச் சென்றுள்ளார். இதன்போது இடைநடுவில் துமிந்த சில்வாவும் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவும் நேருக்கு நேர் சந்தித்துள்ளனர்.

இதில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் உத்தரவிற்கமைய உடனடியாக செயல்பட்ட அவரது குழுவினரில் ஒருவர் பாரத லக்ஸ்மன் மீதும் அவரது பாதுகாவலர் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவும் அவரது ஆதரவாளர்களும் அங்கிருந்து அகன்று செல்ல முயற்சித்த போது அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளுமாறு துமிந்த சில்வா உத்தரவிட்டுள்ளார். இதனையடுத்து துமிந்த சில்வாவின் குழு உறுப்பினர் ஒருவர் பாரத லக்ஸ்மன் பிரேமச் சந்திரவை விரட்டிச் சென்று அவர் மீது 7 முறை துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் விபரித்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஸ்தலத்திலேயே பாரத லக்ஸ்மன் கொல்லப்பட்டார். இதனையடுத்து அவரது ஆதரவாளர்கள் துமிந்த சில்வா மீதும் அவரது குழுவினர் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

சில நொடிப்பொழுதில் நிலைமை பதற்றமாக, இரு தரப்பினருக்கிடையே இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பாரத லக்ஸ்மனின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த துமிந்த சில்வாவும் அவரது ஆதரவாளர்களும் சிறிஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கு தலையில் துப்பாக்கி சூடு பட்டதால் உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு 2 தோட்டாக்கள் அகற்றப்பட்டது. இந்நிலையில் அவர் ஆபத்தான கட்டத்திலிருந்து மீண்டுள்ளார் என ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

இச் சம்பவம் தொடர்பில் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலைய பணிப்பாளர் லக்ஸ்மன் குலுகல்லவிடம் கருத்துக் கேட்டபோது,

இச்சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அவ்விசாரணை அறிக்கை வந்த பின்னரே தகவல்கள் வெளியிட முடியுமெனத் தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட பதற்றமான சூழலில் மேலும் வன்செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்க முல்லேரியா பகுதியில் நேற்று மாலை 4.00 மணிமுதல் இன்று காலை 6.00 மணி வரை பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (பா)

## அமெரிக்காவை ஏமாற்ற...

நம்பகமாக தகவல் கிடைத்துள்ளது.

அணுகுண்டுகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு அரைப்பூரணப் பொருளே றெட் மெக்குரி என்றும் விக்கிபீடியா கலைக் களஞ்சியத்தின் மூலம் ஆதாரம் கிடைத்துள்ளது.

இது மரபுரீதியாகப் பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த வெடிபொருளே. இதனை சிறிய அல்லது எளிதில் காவிச் செல்லக் கூடிய குண்டுகளுடன் இணைத்து பேரழிவு ஆயுதமாகப் பயன்படுத்த முடியும்.

2002-ம் ஆண்டின் முதலாவது காலாண்டில் கொழும்பில் விஜேராம மாவத்தையில் சதொசவுக்கு அருகில் உள்ள ஆய்வு மற்றும் கருவிகள் முகவர் நிறுவனம் ஒன்றிடம் விடுதலைப் புலிகள் இந்த இரசாயனம் குறித்து விசாரித்துள்ளனர்.

அதே காலப் பகுதியில் தமது அனைத்துலக ஆயுத முகவர்களின் மூலம் விடுதலைப்புலிகள் இந்த இரசாயனப் பொருளைக் கொள்வனவு செய்ய முயற்சித்துள்ளனர்.

இந்த இரசாயனப் பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஹேர்குலிஸ் கெமிக்கல் கம்பனி லிமிட்டட் என்ற நிறுவனத்தில் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளது.

அத்துடன் கடந்த சில ஆண்டுகளாக விடுதலைப் புலிகள் தமது சில போராளிகளை அனைத்துலக அளவில் நடைபெறும் அணுவாயுதப் போர்முறை பற்றிய கருத்தரங்குகளுக்கு அனுப்பி வருகின்றனர்.

லண்டனில் ஹற்றன் என்ற இடத்தில் 2001 செப்டம்பர் 30-ம் திகதி தொடக்கம் நவம்பர் முதலாம் திகதி வரை நடைபெற்ற எஸ்.எம்.ஐ பாதுகாப்பு கருத்தரங்கிலும் புலிகளின் போராளிகள் பங்குபற்றியுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் அணுவாயுதப் போர் முறை பற்றியும் ஆராயப்பட்டது. போர் நிறுத்த உடன்பாடு கைச்சாத்திட்ட பின்னர் விடுதலைப்புலிகள் அணுவாயுதப் போர்முறையுடன் தொடர்புடைய நூல்களை குறிப்பிடத்தக்களவில் கொள்வனவு செய்துள்ளனர்.

கவனத்துக்குரிய உணர்வுபூர்வமான இந்தத் தகவல்களின் அடிப்படையில் விடுதலைப்புலிகளுக்கு இரசாயன ஆயுதங்கள் கிடைப்பதை தடுப்பதற்கு பொருத்தமான அனைத்துலக சமூகத்தையும் நாட வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சு பரிந்துரை செய்வதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை 2006 யூலை 31-ம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வாஷிங்டனுக்கு அனுப்பியதாக விக்கிலீக்ஸ் தகவல் கூறியுள்ளது.

இதையடுத்து 2006 ஒகஸ்ட் 15-ம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் இருந்து அப்போதைய இராஜாங்கச் செயலர் கொண்டலிசா ரைஸ் கொழும்புக்கு அனுப்பிய பதிலையும் விக்கிலீக்ஸ் வெளியிட் டுள்ளது.

றெட்மேக்குரியை பேரழிவு ஆயுதங்களாக வழக்கமான வெடி பொருள் அல்லது வேறு ஆயுதங்களில் இணைத்துப் பயன்படுத்த முடியாது என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

றெட்மேக்குரியை பேரழிவு ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்று வாஷிங்டனிடம் நம்பகமான தகவல் இல்லை என்றும் இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முகவரியில் எந்தவொரு இரசாயன நிறுவனமும் இருப்பதை அடையாளம் காண முடியவில்லை.

இந்தக் காரணிகளின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கை நம்பகமானது அல்ல என்றும் அதனைக் கருத்தில் கொள்ள வேண்டிய தேவையில்லை என்றும் இலங்கை அரசுக்கு கூறுமாறு அந்த தகவல் பரிமாற்றக் குறிப்பில் கொண்டலிசா ரைஸ் குறிப்பிட்டுள்ளதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் கூறுகிறது. (பா)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
பல வருட ஆய்வுமூலம் உருவாக்கப்பட்ட புதியமுறையிலான கற்பித்தல் மூலம் பல நூற்றுக்கணக்கான அதிபர், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், விற்பனை பிரதிநிதிகளுக்கு ஆங்கிலம் பேசுதலில் முழுமையான தேர்ச்சியினை உருவாக்கிய
MyWay ஆசிரியரின் சனி, ஞாயிறு மற்றும் வார வகுப்புக்களில் நேரடியாக பயிற்சிபெற கடைசி சந்தர்ப்பம்
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மற்றும் நுழைவு மாணவர்கள், பட்டதாரிகள், அரச, தனியார் அலுவலர்கள், விற்பனை பிரதிநிதிகள் கலந்துகொள்ளும்
இலவச ஆங்கில வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
11.10.2011 செவ்வாய் (போயா விடுமுறை தினம்)
பிரிவுகள் : (ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 3-4, 4-5, 5-6
இலகுவாக முழுமையாக ஆங்கிலத்தினை கதைப்பதற்கான மைவே ஆசிரியரின் நேரடி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோருக்கு இதுவே கடைசி சந்தர்ப்பமாகும்
இந்த இலவச அடிப்படை வகுப்பில் கலந்துகொள்வோர் மட்டுமே MyWay இன் வார அல்லது வார இறுதி வகுப்பில் கலந்துகொள்ளலாம்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

கார் வாடகைக்கு
மிகவும் குறைந்த கட்டணத்தில் அதிநவீன சொகுசு கார்கள் வாடகைக்கு விடப்படும். திருமண வைபவங்களுக்கும் மாத, வார, நாள் வாடகைக்கு கிடைக்கும்.
தொடர்புகளுக்கு :-
0776237546
(6347)

விற்பனை மேம்படுத்தல் பிரதிநிதிகள் தேவை
சிறந்த கவர்ச்சிகரமான பேச்சாற்றல் உடையவர்கள் உடன் தேவை.
(2 ஆண், ஒரு பெண்)
குறிப்பு :- (Part time Job)
09.10.2011 – 12 மணிக்கு முன்னர் தொடர்பு – 0775881710
E-mail:- Smilesjaffna@gmail.com (C-4678)

வரணி மிசன் பாம்
இறைச்சிக் கோழி (Broiler)
முட்டை (Egg)
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 0773435719
விற்பனை நிலையம்,
வரணி மிசன்பாம்,
வரணி.
(634)

After A/L?
பதிவுகள் 10.10.2011 முன் நேரில்
CIMA-UK
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5 PM
Batch III : Mon - Fri 8.30 AM - 2 PM
Engineering-USA
Software / Network
Government Schol.
BIT University of Colombo-ucsc
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch III : Mon- Thu 4.30-5.30 PM
FIT O/L or A/L தகைமை இன்றி பல்கலைக்கழக அனுமதிக்கு
Multimedia_USA
கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CISCO-CCNA Oracle Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.
MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction
Diploma Courses..
Free5 Course fee*
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English
தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிர்ங்கள்

உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை
தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!
மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.
DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து
மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள், CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS
திருமுருகன் கொம் நெற்
இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.